பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன்

நினைவுப் பேருரை

# யாழ்ப்பாணத்துப் பண்பாடு: மறந்தவையும் மறைந்தவையும்

# Jaffna's Culture: The forgotten and Vanished

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன்

நினைவுப் பேருரை

# யாழ்ப்பாணத்துப் பண்பாடு : மறந்தவையும் மறைந்தவையும்

# Jaffna's Culture : The forgotten and Vanished

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

• தலைப்பு : யாழ்ப்பாணத்துப் பண்பாடு : மறந்தவையும் மறைந்தவையும், • ஆசிரியர் : பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, • © : ஆசிரியர், • பக்கம் : iv + 40, • அச்சிட்டோர் : கரிகணன் பிரிண்டேர்ஸ், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். • வெளியீடு : பேராசிரியர், வித்தியானந்தன் அறக்கட்டளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 20.11.2009

# அறிமுகம்

அன்புக்குரியவர்களே!

எங்கள் செழுங்கலை நியமமான யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதற்றுணைவேந்தராக கொலுவிருந்த பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் நினைவெழுதும் இந்தப்பொழுது பெறுமதியானது.

தமிழியலுக்கும் உயர்கல்விக்குமான மேலான பணிகளுக்கான போற்றுதலுடன், அவர் பெயரில் அமைந்த "வித்தியானந்தன் நூலகத்"தில் அவரின் உருவச் சிலையை நிறுவி, திறந்துவைக்கும் இந்நாளில் இந்த ஆண்டுக்கான நினைவுப்பேருரை இடம்பெறுவது பெருமகிழ்ச்சி தருகின்றது.

தமிழர் சால்பின் வேர்களைத் தேடியும் விழுதுகளைப் பேணியும் நின்ற பேராசானின் வாழ்வியலுக்கு நெருக்கமான பொருளில் இன்றைய நினைவுப் பேருரை அமைகின்றது.

கடந்தகாலம் பற்றிய உணர்வை இழதலின் ஆபத்து, வாழ்வின் அனைத்து முகங்களிலும் உணரப்படும் இவ்வேளை, யாழ்ப்பாணப் பண்பாடு: மறந்தவையும், மறைந்தவையும் எனும் பொருளில் பொருத்த மான இந்தப் பேருரையை எங்கள் தமிழ்ப் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நவீன வாழ்வின் மாற்றங்களிடை மரபுவழிப்பண்பாட்டின் செழுமையான அனுபவங்கள் பற்றிய மறதிக்குரிய மருந்தை உடன் கண்டாகவேண்டும். குடியேற்ற நாட்டாதிக்கம் தொடங்கி இன்றைய நவகுடியேற்றவாத - 'உலக மயமாக்க' அலைகள்வரை விழுங்கியுள்ள- விழுங்குகின்ற சுதேச அடையாளங்களை மீட்டெடுக்கும் பண்பாட்டுப் பணி பேராசிரியர் சிவலிங்கராஜாவின் இன்றைய உரையின்வழி மீள் உயிர்ப்புப் பெறவேண்டும்.

வித்தியானந்தன் வழிவந்த சால்புகளுடன் பண்பாட்டு மேம்பாட்டுக்கான இலட்சிய வாழ்வில் பயணிக்கின்ற பேராசிரியர் சிவலிங்கராஜாவின் இக்காலப் பணியைப் பாராட்டுவோம்.

பண்பாட்டின் மறக்கக்கூடாத பக்கங்களை - பண்புகளை மீட்டெடுப்போம்; மறந்துவிடவேண்டிய அநீதியான பக்கங்களை அகற்றிவிடும் உறுதியைப் பூணுவோம்.

எங்கள்பல்கலைக்கழகத்தின் மேன்மைகளினதும், எங்களது வல்லமைகளினதும் ஊற்றுக் கண்ணாகி, எங்களை வழிப்படுத்தும் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் நினைவுகளை என்றென்றும் காத்து நிற்போம்.

பேராசிரியர்
நாகலிங்கம் சண்முகலிங்கன்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

துணைவேந்தர் பணிமனை
திருநெல்வேலி
*2009.11.20*

# யாழ்ப்பாணப் பண்பாடு:
# மறந்தவையும் மறைந்தவையும்

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்கள் என்பதை நோக்குவதற்கு முன்னர், பண்பாடு என்றால் என்ன? என்பதை வரையறை செய்துகொள்வது அவசியமாகும். பண்பாடுபற்றிய ஆய்வினை மேற்கொண்ட மேலைப்புல அறிஞர்கள் 160க்கும் மேற்பட்ட வரையறைகளைத் தொகுத்துக் காட்டியுள்ளனர்[1]. அவற்றுள் எமக்குப் பொருத்தமான சிலவற்றை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

> மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தைமுறைகளும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும்"[2]
>
> பண்பாடு என்பது அனைவராலும் பகிர்ந்துகொள்ளப்பட்ட கருத்துக்களும், சமுதாய மரபுரிமையாகப் பெறப்பட்ட நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் அடங்கிய தொகுதியாகும்.[3]
>
> "பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதர்கள் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும்.[4]
>
> "பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கட்கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக்கொண்ட பௌதிகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மதநடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினதும் தொகுதியாகும். ஒரு கூட்டத்தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுயாகும்[5].

இவ்வாறு பண்பாடுபற்றிய வரையறைகளை மானிடவியல் ஆய்வாளர்கள் முன்வைத்துள்ளனர். இவையெல்லாம் ஏதோ ஒருவகையில்

பெருமளவுக்கு ஒன்றுடன்ஒன்று தொடர்புபட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்களை வகைப்படுத்திக் காட்டுவதற்குமுன்னர், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் அமைவிடம் பற்றியும், புவியியல் அமைப்புப்பற்றியும் விளங்கிக் கொள்வது அவசியமாகும். சில அறிஞர்கள் பண்பாட்டைப் புவியியல் அடிப்படையில் அல்லது நிலப் பரப்பு அடிப்படையில் நோக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, இலங்கைப் பண்பாடு, இந்தியப் பண்பாடு எனக்குறிப்பிடு வதைச் சுட்டிக்காட்டலாம் எனினும் இவற்றுக்கிடையே பல்வேறு வகையான வேறுபாடுகள் இருப்பது உணரப்பட்டபோதும் பொதுவாக இவ்வாறு அழைக்கும் வழக்காறு இன்றுவரை தொடர்கின்றது. பண்பாடு என்பது பன்மைத்தன்மை கொண்டது என்பதையும் மனங்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணப் பிரதேசம் என்னும் பெருவட்டத்துள் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பற்று முதலிய பகுதிகள் உள்ளடங்கு கின்றன. இப்பிரிவுகளுக்கிடையே பண்பாட்டுக் கோலங்களிற் சிற்சில நுண்ணிய வேறுபாடுகள், அல்லது தனித்தன்மைகள் காணப்படுவது உண்மையே. எனினும் எல்லாப் பிரிவுகளுக்கும் உரித்தான பொதுவான பண்பாட்டு அம்சங்களையே இவ்வுரையிலே குறிப்பிடுகின்றோம்.

பண்பாடு என்றசொல், வாழ்க்கைமுறை அல்லது வாழ்வியல் என்ற அர்த்தத்திலும் பயின்றுவருகின்றது. தமிழிலே பண்பாடு என்ற சொற்பயன்பாடு மிக அண்மைக் காலத்திலேயே அறிமுகமானது. (CULTURE என்ற ஆங்கிலப் பதத்திற்கு நாகரிகம் என்ற சொல்லே பெருவழக்காக இருந்தது. பழந்தமிழ் இலக்கியங்களிற் பண்பாட்டினைக் குறிக்கச் சால்பு என்ற பதமே கையாளப்பட்டுள்ளது என்பர். Culture என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பண்பாடு என்ற சொல் மிகப் பொருத்தமாகவும், சிறப்பாகவும் அமைந்திருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. வாழ்வியல் அல்லது வாழ்க்கைமுறைகள் எனப் பன்மையிலே சுட்டுவதும பண்பாட்டின் பன்மைத்தன்மையை மனங்கொண்டே எனக் கருதலாம்.

பண்பாடு என்ற சொற்பொருள் வியாக்கியானம் இவ்வுரைக்கு முக்கியமானது அல்ல. எனினும் ஒரு முன்னீடாக இதனைக் குறிப்பிட்டோம்.

பண்பாடு பற்றிய ஆய்வினைச் செய்தவர்கள், பண்பாட்டைப் பொருள்சார் பண்பாடு, பொருள்சாராத பண்பாடு என இரண்டாகப் பாகுபாடு செய்வர். ஆய்வு வசதிக்காக இவ்வாறு பாகுபாடு செய்யப்பட்டுள்ளபோதும், பொருள்சார் பண்பாடும் பொருள் சாராத பண்பாடும் ஒரோவழி ஒன்றிணைந்து செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. ஒரு சமுதாயப் பண்பாட்டு முறையைத் தெளிவாக அறிந்து கொள்ள, முதலிலே பொருள்சார் பண்பாட்டுக் கூறுகளின் முக்கியத்து வத்தைத் தெரிந்துகொள்வது அவசியமெனப் பண்பாட்டு மானிடவிய லாளர்கள் குறிப்பிடுகின்றனர். பண்பாட்டு மானிடவியல் ஆய்வாளர் பக்தவற்சலபாரதி, பொருள்சார் பண்பாடு பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

> "ஆய்வு செய்யும் சமூகத்தின் பொருள்சார் பண்பாட்டைப் பற்றிய (Material culture) தரவுகள் மிகவும் பயனுள்ளவை. வீடுகளின் அமைப்பு, செய்பொருள்கள், வீட்டுச்சாமான்ள், உடைகள், அணிகலன்கள், போக்குவரத்துச் சாதனங்கள், கால்நடைகள், தொழிற்கருவிகள், சடங்குப் பொருள்கள் போன்ற பல்வேறு வகையான பொருள்களைப் பற்றிய தரவுகள், சமுதாயப் பண்பாட்டு முறைகளை அறியப் பெரிதும் உதவும்"[6]

இந்த வகையிலே நோக்கும்பொழுது யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பொருள்சார் பண்பாடுகள் யாவற்றையும் இவ்வுரையிலே விரித்துக் கூறுவது கடினமானது. குறிப்பிட்ட சில பொதுமைப்பண்புள்ள அதேவேளை, முக்கியமானவை எனக் கருதும் பண்பாட்டுக் கோலங்கள் சிலவற்றை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இங்கு நான் சுட்டிக்காட்டப்போகும் பண்பாட்டுக் கோலங்கள் பலவற்றை நாம் இழந்துவிட்டோம். சிலவற்றை மாற்றுவத்தோடு பேணி வருகின்றோம். இன்னும் சிலவற்றைப் "பொய்யாய், பழங்கதையாய்,

கனவாய்" மெல்லமெல்லப் போகவிட்டுவிட்டோம். பண்பாடு என்பது ஒரு ஓட்டம். அது இயங்கியற் சாத்தியமுடையது. அது மாறுவது அல்லது மாற்றப்படுவது தவிர்க்கமுடியாதது. பண்பாடு என்பது மாறாத தன்மை கொண்டது என்ற கருத்தியலாளர்களும் உளர்.

பண்பாடு மாறுவதற்கு அல்லது மாற்றுருப் பெறுவதற்கு அல்லது மறைவதற்குப் பலகாரணிகள் உள்ளன. சமூக, பொருளாதார, அரசியல், வரலாற்று மாற்றங்களும், இம்மாற்றங்களால் உருவான கல்வி, தொழில், உலகத்தொடர்கள் முதலானவையும், பண்பாட்டைக் கொள்ளலும், கொடுத்தலும் என்ற பரிமாற்றமுறையும் இந்நிலைக்குப் பிரதான காரணிகள் எனலாம்.

19ஆம் நூற்றாண்டையும், இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதியையும் ஆதாரமாகக்கொண்டே யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்களை இங்கு சுட்டிச்செல்லலாம் என எண்ணுகிறேன்.

"யாழ்ப்பாணச் சமூக அமைப்பென்பது அடிப்படையில் அதிகார அடுக்குகளை உடையது. இந்த அதிகார அடுக்குமுறை என்பது சாதிகளை அடிப்படையாகக் கொண்டது. யாழ்ப்பாணப் பாரம்பரிய சமூக அமைப்பென்பது பௌதிக ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் வேளாள முதன்மையுடையது. குடித்தொகையிலும் ஏனைய சாதியினரைவிட வேளாளர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். அத்துடன் காலனிய ஆட்சியும் வேளாளர்களது சமூக மேலாண்மையைப் பலப்படுத்துவ தாகவே அடிப்படையில் இருந்தது. ஒல்லாந்த, ரோமன் டச்சுச்சட்டம் முதல், காலனிய ஆட்சியுடன் முன்னணிபெற்ற புகையிலை முதலான காசுப் பயிர்களின் செய்கை - கல்வி - நிர்வாகம் முதலியன யாவும் அடிப்படையில் அமைந்ததை அவதானிக்க முடியும்"[7]

இவ்வாறு யாழ்ப்பாணச் சமூக அமைப்புப்பற்றி அகிலன் குறிப்பிடுவது மிகுந்த அவதானிப்புக்குரியது. இந்த நீண்ட மேற்கோளை உறுதிசெய்வதாக அதிகம் கவனிப்புக்குட்படாத எழுத்து இலக்கியங்

களும், அரை வாய்மொழிப் பாடல்களும் (oragetre) நாட்டுப் பாடல்களும் செவிவழிக் கதைகளும் நிறையவே உள்ளன. யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்களைச் சாதி அடிப்படையிலும் சமூக அதிகார அடுக்குக்களின் அடிப்படையிலும், நோக்குவது தவிர்க்க முடியாதது. விரும்பியோ விரும்பாமலோ ஒன்றுடன் ஒன்று 'அத்துவித"ப் பட்டுள்ளதைப் புலமைத்துவ நோக்கில் நிராகரிப்பது கடினமானது.

யாழ்ப்பாணத்தின் பொருள்சார் பண்பாட்டுக் கூறுகளை முதலிலே நோக்குவோம். பொருள்சார் பண்பாட்டுக் கூறுகள் யாவற்றை யும் விரிவாகக் குறிப்பிட்டு ஆராய்வது இவ்வுரையிலே சாத்தியமற்றது. பொதுவான, முதன்மையான பண்பாட்டுக் கோலங்கள் சிலவற்றையே குறிப்பிட்டு விளக்க முனைகின்றேன். யாழ்ப்பாணத்துப் பொருள்சார் பண்பாடுகளில் உணவு, உடை, உறையுள், போக்குவரத்து, புழங்கு பொருட்கள், அணிகலன்கள் முதலியவற்றைப் பற்றியே இங்கு குறிப்பிடுகிறேன்.

**உணவு**

ஒரு பிரதேச மக்களின் பண்பாட்டுக் கோலங்களில் உணவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பது எமது இலக்கிய மரபு. இவ்வாறான பல தொடர்களை எமது இலக்கியப் பரப்பிலே தரிசிக்கலாம். உணவின் முக்கியத்துவம் உலகப் பொதுவானது.

யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் உணவுப் பழக்கங்களுக்கு அடிப்படையாக அமைவது புவியியல்சார் நிலவியல்பே எனலாம். பெரும்பாலும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பயிரிடக்கூடிய நெல், சாமை, தினை, குரக்கன், வரகு, எள், பயறு, உழுந்து முதலிய தானிய வகைகளோடு கிழங்கு வகைகளும், பனம் பண்டங்களும், மீன், இறைச்சி வகைகளும் இப்பிரதேச மக்களின் உணவு வகைகள் எனலாம்.

குறிப்பாக, யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்த முக்கிய உணவாக அமைந்தது பனம் பண்டங்களே எனலாம்.

இப்பிரதேச மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ததிற் பனம் பண்டங்களுக்குப் பிரதான பங்குண்டு. 19ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்திற் 'பனங்காய்ப்பாரதம்' என்ற பெயரில் ஓர் இலக்கியம் தோன்றியதையும் இவ்விடத்திலே நினைவு கூரலாம். சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் பனம் பண்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருந்தது.

யாழ்ப்பாணத்திலே 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்ட சீதன - முதுச உறுதிகளிற் குறிப்பிட்டளவு பனங்காணி (பனை அடைப்பு) வழங்கப்பட்டமையைக் கண்டுகொள்ள முடிகின்றது. குடும்பத்தின் வாழ்வாதாரத்திற் பனை வகித்த பங்கினையே இந்த உறுதிகள் புலப்படுத்துகின்றன. பனையின் பயன்பாடுபற்றி யாழ்ப்பாணத்துப் புலவர்களும், வரகவிகளும் விதந்து பாடியமை அதன் பயன்பாட்டு முக்கியத்துவத்தை விளக்கும் பண்பாட்டு வெளிப்பாடே எனலாம். வாழ்வுச் சுவடுகள் என்னும் வாழ்க்கை வரலாற்று நூலில் இடம் பெறும் பின்வரும் பகுதி பனம் பண்டங்களில் ஒன்றான பனாட்டின் பண்பாட்டு முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

> "வசதி படைத்தோர், வசதி குறைந்தோர் என்கின்ற பாகுபாடின்றி அக்காலத்தில் எல்லோரும் பனம்பழங்களைப் பொறுக்கிச் சேர்த்துப் பனாட்டுச் செய்வர்...... பனாட்டுத் தட்டுக்களை வடிவாக மடித்துக் கூடைகளில் அடுக்கி (பனையோலையாற் செய்யப்பட்ட கூடை, இதனைத் தொக்கடி என்பர்). வீட்டில் அடுப்பு எரிக்கும் இடத்தின்மேல் இதற்கென ஏற்கனவே வகுத்த பரண்களிற் புகைபிடித்துப் பனாட்டுப் பழுதடையாதிருப்ப தற்காக அவற்றை அடுக்கி வைப்பர்"[8]

இக்கூற்றுப் பனாட்டின் முக்கியத்துவத்தை மாத்திரம் பேசாமல், உணவுப் பொருட்களைப் பழுதடையாது பாதுகாக்கும் பண்பாட்டு முறைமையினையும் பேசுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. மாரிகாலத்திற்குரியவற்றைக் கோடைகாலத்திலேயே சேகரித்துப் பாதுகாக்கும் முறைமையும் எமது பண்பாட்டுக் கோலத்திலேயே முக்கிய இடம் பெற்றிருந்தது. வற்றல், கருவாடு, வடகம் முதலியன இன்றும் வழக்கிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பனம் பண்டங்களைப் பட்டியல் இட்டுக்காட்டுவது எனது நோக்கமல்ல. ஆனால், பனையில் இருந்துபெற்ற உணவு வகைகள பலவற்றை இன்று நாம் இழந்துவிட்டோம். நாம் ஏலவே சுட்டிக்காட்டியது போன்று, இவற்றின் இழப்புக்கு அல்லது மறைவுக்கு நமது சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களே காரணம் எனலாம். இன்றைய இளந்தலைமுறையினரிற் பலர் ஒடியற்பிட்டு, பாணிப்பனாட்டு, கல்லக்காரம் (பனங்கற்கண்டு, பனைவெல்லம்) பதநீர், ஒடியற்கூழ் முதலானவற்றைக் கண்டிருக்கக்கூடமாட்டார்கள். யாழ்ப்பாணத்தின் சில கிராமங்களில் இன்றும் இவை பயன்பாட்டில் உள்ளதையும் குறிப்பிட வேண்டும்.

ஒரு காலத்தில் ஏழைகளின் பிரதான உணவாக இருந்த ஒடியற்கூழ், இன்று அதிக செலவில் தயாரிக்கும் பண்பாட்டுப் பேணுகையின் அடையாளமாக அமைவதையும் அவதானிக்கமுடிகின்றது. புலம்பெயர் தமிழர்களிடையேயும் இந்த ஒடியற்கூழ் பாரம்பரியம் வழங்கிவருவதாகக் கூறப்படுகின்றது. பண்பாட்டு ஓட்டத்தில் இதன் இயங்கியல் சாத்தியப்பாட்டில் இத்தகைய நகர்வு இயல்பானதே எனலாம்.

பனம் பண்டம் போலவே சாமை, தினை, வரகு, குரக்கன் முதலானவற்றின் பயன்பாடும் மிகமிக அருகிவிட்டது. இவற்றைப் பயிரிடுவதும் இப்போது குறைந்துவிட்டது. 19ஆம் நூற்றாண்டில் அரிசிப் பயன்பாட்டிலும் சற்று அதிகமாகவே முற்குறிப்பிட்ட சிறுதானிய வகைகள் பயன்படுத்தப்பட்டன என அறியமுடிகின்றது. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலே நிலவுடைமையாளர்களுக்கும், வசதிபடைத்த சமூக மேலாதிக்கமுடையவர்களுக்குமே அரிசி போதியளவுக்குக் கிடைத்தது. மற்றவர்கள் பெரும்பாலும் சிறுதானிய வகைகளையும், கிழங்கு வகைகளையுமே தமது நாளாந்த உணவாகப் பயன்படுத்தினர் எனக் கூறப்படுகின்றது.

அரிசி முதலானவை வெளியிடங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டபோதும் ஏழைகள் அவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய கொள்வனவு சத்தியுடையவர்களாக இருக்கவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

கோதுமை மாவின் (கூப்பன்மா) வருகையும் பயன்பாடும் முற்குறிப்பிட்ட உணவுப் பழக்கங்கள் அருகிப்போகக் காரணமாயின. கோதுமை மாவின் பயன்பாடு பற்றிய நாட்டுப் பாடல்களும் அரைவாய் மொழிப்பாடல்களும் (oragetre) யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழங்கி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. எமது பண்பாட்டுப் பாரம்பரியத்திலே இணைந்துபோயிருந்த உணவு வகைகள் பல இன்று மறைந்து, மறந்து முதியவர்களின் நினைவுகளில் மட்டுமே நிலைத்திருக்கின்றது.

யாழ்ப்பாணச் சமூகத்தவரின் உணவு வகைகளிலே மீன், இறைச்சிப் பயன்பாடும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இருந்திருக்கின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கடல் சூழ்ந்திருப்பதாற் போதியளவு மீனவளம் இங்குள்ள மக்களுக்குக் கிடைத்தது. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சில பகுதிகளில் இன்றும் 'கறி' என்ற சொல் மீனைக்குறிக்கப் பயன்படுத்தப்படுவதையும் அவதானிக்கமுடிகின்றது. (உதாரணம்: கறிக்கடை, கறிக்காறி, கறிக்காரன்) மரக்கறி, மாமிசக்கறி என்ற பாகுபாடு இன்று வழக்கில் உள்ளது.

மரக்கறியை 'ஆருதக்கறி' என வழங்கும் வழக்காறே இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை வழக்கில் இருந்தது என்பர். யாழ்ப்பாணத்திலே சில சாதியினர் பரம்பரை பரம்பரையாகத் தாவரபோசனம் அருந்துபவர்களாகவே இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துச் சைவ மறுமலர்ச்சி இயக்கத்தினால் ஈர்க்கப்பட்ட பலர் மாமிச போசனத்தைத் தவிர்த்தனர். இதனால் இவர்கள் சமூக மேனிலையாக்க அந்தஸ்தினைப் பேணிக்கொள்ளவும் முயன்றனர். இந்த இடத்திலே டாக்டர் கிறீன் குறிப்பிடும் ஒரு கருத்தினைச் சுட்டிக்காட்டுவது எமது பிரதேச மக்களின் உணவுப் பழக்க வழக்கத்தின் பரிமாணங்களை அறிய உதவும் என்று நம்புகிறேன்.

> "Some of the respectable people here eat field rats as well bats and lizarids"[9]

யாழ்ப்பாணச் சமூகத்திற் கௌரவமானவர்கள்கூட வயல் எலிகளையும் (அகிழான் என்பர்) வெளவால், உடும்பு முதலியவற்றையும் உண்கிறார்கள் என்று டாக்டர் கிறீன் குறிப்பிடுவது மிகுந்த கவனத்திற் குரியது. சமூக மேலாண்மையுடைய உயர்சாதிக்காரர்களுக்கு அவர்களது அடிமை குடிமைகள் இவ்வகையான இறைச்சிகளைக் கொண்டுவந்து கொடுத்திருப்பர் எனக் கருதலாம். காலப்போக்கில் அந்தஸ்துப் பேணுகை காரணமாக இத்தகைய உணவு வகைகளை மேனிலைச்சாதியினர் தவிர்த்திருப்பர். மிக அண்மைக்காலம் வரை அடிநிலை மக்கள் மத்தியிலே வயல் எலி முதலானவற்றை உண்ணும் பழக்கம் இருந்தமை நாம் அறியாதது அல்ல.

யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் பிரதான உணவு வகைகளோடு சிற்றுண்டிப் (பலகாரவகை) பயன்பாடும் வழக்கத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அவற்றின் பாகமுறை பற்றியோ, பண்டங்களின் விபரம் பற்றியோ விளக்க வேண்டியதில்லை. யாழ்ப்பாணத்திலே தோன்றிய இலக்கியங்கள் பல இச்சிற்றுண்டி வகைகளைப் பற்றி விரிவாகப் பேசுகின்றன. வகை மாதிரிக்குக் காதலியாற்றுப்படையில்வரும் ஒருசில அடிகளைச் சுட்டிக்காட்டலாம்.

"விட்டுக் கள்ளினை விளைபத மெய்துநெல்
மாவினிற் சுட்ட வண்புளிச் சப்பமும்
பனங்காய்க் களியுடன் சாமைமாக் குழைத்து
வனைபந்தினைப்போல் நெய்யிற் போட்டுத்
தட்டுத் தட்டாய்ச் சுட்டு மேலெடுத்து,
.....................................................
அருவிலை கொடுத்தே அரக்கு மாந்தும்
மாந்தர் வாய்க்கு வெங்கறிப்பாக
வளமுற உதவும் வடையின் கடகமும்
முறுக்கு, நல்வாய்ப்பன், மோதகம் இட்டலி,
பிட்டு, தோசை, புகழிடியப்பம்
எள்ளுக் கட்டியும்.........."[10]

இவற்றிலே சில இன்று அருகிப்போய்விட்டன. சிற்சில பிரதேசங்களுக்கெனச் சில சிற்றுண்டி வகைகள் சிறப்பானவையாகக்

கருதப்படுவதும் உண்டு. உதாரணமாகப் 'பருத்தித்துறை வடை' என்பதனைக் குறிப்பிடலாம். உலகெங்கும் பருத்தித்துறை வடையென வழங்கும் இந்தவடையை வடமராட்சிப் பிரதேசத்திலே கள்ளுவடை என்றே அழைத்தனர். பின்னர் சற்று நாகரிகமாகத் தட்டைவடை என அழைத்தனர். இவ்வுணவுப் பொருளின் பெயர்கூட ஒரு சமூகமாற்றப் பண்பாட்டின் அடையாளமாகப் புலப்படுவது கவனிப்புக்குரியது.

காலனித்துவ காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தேயிலை, கோப்பிக்கு முன்னர் பால், மோர், பழங்கஞ்சி, பதநீர் முதலியனவே இப்பிரதேச மக்களின் பானவகைகளாக இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. இன்றைய இளந்தலைமுறையினர் "பழங்கஞ்சி என்றால் என்ன?" என்று கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அது இன்று மறைந்து விட்டது. நாங்கள் மறந்தும் விட்டோம். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தோன்றிய குழந்தைப்பாடல் ஒன்றில் (இது ஈழத்துப்பாடல் என்று கூறுப்படுகின்றது)

"அம்மா மெத்தப் பசிக்கிறது
அப்பம் இரண்டு இப்போ தா
தந்தால் உடனே பசிதீரும்
தாகம் தீர மோருந்தா"

மோரின் முக்கியத்துவம் இவ்வாறு புலப்படுத்தப்படுவதையும் சுட்டிக்காட்டலாம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே மா, பலா, வாழை வெள்ளரி முதலான பழவகைகளும் பாவனையில் இருந்தன. இன்றும் இருக்கின்றன. யாழ்ப்பாண மாம்பழத்தின் சுவைபற்றிப் பலரும் விதந்து கூறுவர். குறிப்பாகத் தென்னிலங்கையில் யாழ்ப்பாண மாம்பழத்திற்குத் தனியானதோர் மதிப்பு இன்றும் உண்டு. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாண மாம்பழத்தின் சுவைபற்றிக் கவிஞர் சச்சிதானந்தன் பின்வருமாறு பாடியுள்ளார் :

"நீதி பிழைப்பிக்கும் நேர்மை தவறுவிக்கும்
பாதிப் படிப்பில் பதவிதரும் - ஏதுக்கும்

ஓம்பட்டிசைவிக்கும் ஒன்றன்றோ யாழ்ப்பாண
மாம்பழத்துத் தீஞ்சுவையின் மாண்பு"

வெறுமனே நகைச்சுவையாக மாத்திரமன்றி யாழ்ப்பாணத்தவர்கள் மாம்பழத்தைப் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்திய பாங்கும் இப்பாடலின் உட்பொருளாகப் பொதிந்திருப்பதை அவதானிக்கலாம்.

**ஆடை அணிகலன்கள்**

19ஆம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலும் யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் உடை மற்றும் அணிகலன்கள் பற்றிய விபரங்களைக் கண்டுகொள்ள எமக்கு உதவுபவை இலக்கியங்களும், மிஷனரிமாரின் குறிப்புக்களும், அக்காலத்திலே எடுக்கப்பட்ட புகைப்படங்களும் முதியவர்கள்தரும் வாய்வழிச் செய்திகளுமேயாகும். அக்காலத்து உடை மற்றும் அணிகலன் வகைகளை ஆண்களுக்குரியவை, பெண்களுக்குரியவை என இரண்டாகப் பகுத்து நோக்கலாம்.

**ஆண்களின் உடையும் அணிகலன்களும்**

யாழ்ப்பாணத்து வேளாளர்களின் உடையைப்பற்றிப் பல்டேயஸ் பின்வருமாறு குறிப்பிடுவர் :

"....... வேளாளர் சீலையை இடுப்பிற் கட்டிக் கால்களுக்கூடாக இழுத்துச் சொருகிக் கொள்ளுவார்கள். (அதாவது தாறுபாய்ச்சிக் கட்டுதல்) காலிற் செருப்புத் தொடுப்பார்கள். மேற்சொல்லிய அரைச்சீலையிலே மடிவிட்டு அதிலே வெற்றிலை பாக்கும் தேவையான போது பாவிப்பதற்குக் கொஞ்சம் கடதாசியும் (ஓலைச் சுவடியாக இருக்க வேண்டும்) வைத்துக்கொள்வார்கள். இடையிலேயே ஒரு வெள்ளி கட்டிய உறைக்குள்ளே ஒரு கத்தி தொங்கவிட்டுக் கொள்வார்கள் (வில்லுக்கத்தியாக இருக்கவேண்டும்) இதனோடு ஓர் வெள்ளி கட்டிய எழுத்தாணியும் வைத்திருப்பதுண்டு"[11]

பல்டேயஸ் இங்கு வெள்ளாளர்கள் என்று குறிப்பிடுவது சுதேச கிராம அதிகாரிகளை எனக் கருதலாம். வெள்ளாள சமூகத்தினரே

யாழ்ப்பாண அரசர் காலம்முதல் கிராமத் தலைமைக்காரர்களாக இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பல்டேயஸ் குறிப்பிடும் சேலையிலே 'மடிவிட்டு'க்கட்டும் மரபு மிக அண்மைக்காலம் வரை யாழ்ப்பாணத்திலே காணப்பட்டது. ஆண், பெண் இருபாலாரும் 'மடிவிட்டு'க்கட்டி அதிலே தமக்குத் தேவையான சில பொருட்களை (பணம் உட்பட) பத்திரமாக வைத்திருப்பர்.

உடுப்பிலே விடும் 'மடிபற்றி' மரபுத் தொடர்களும், பழமொழிகளும் நாட்டுப் பாடல்களும் யாழ்ப்பாணத்திலே வழங்கி வருவதை இன்று அவதானிக்கலாம்.
உ+ம்: மடியிலே கைவைக்கின்றார், மடியிலே கட்டி வளர்த்தல், அடிமடியைத்தேடுதல், மடிப்பிச்சை முதலானவை

பெரும்பாலான ஆண்கள் வேட்டி சால்வை முதலியவற்றையே அணிந்தனர். சால்வையைச் 'சவுக்கம்' என அழைக்கும் வழக்காறும் இருந்தது. வேட்டியிலும் எட்டுமுழ வேட்டி, நான்குமுழவேட்டி என இரண்டுவகை வேட்டிகள் பயன்படுத்தப்பட்டன. பொதுவாகத் தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக இவை விளங்கின. 'உண்பதுநாழி உடுப்பது நான்குமுழம்' என்ற நீதிப்பாடல் நாம் அறியாதது அல்ல.

அக்காலத்தில் ஒருவரின் உடையைக் கொண்டு அவரின் சாதி, சமூக அந்தஸ்து முதலானவற்றைக் கண்டுகொள்ளலாம். வேட்டியை உடுக்கும் முறைமையிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. யாழ்ப்பாணத்திலே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள், சால்வை என்னும் மேலாடையை அணிய அனுமதிக்கப்பட வில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் காலத்திலே யாழ்ப்பாணத்தில் தாழ்ந்தப்பட்ட வகுப்பிலுள்ளோர் தங்கள் உடைகளில் மாற்றங்களைக் கொண்டுவர முற்பட்டபோது உயர்சாதியினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்திற் கொமாண்டோராகப் பதவிவகித்த சுவாடக்குறூன்

வேளாளரல்லாத மற்றைய சாதியினர் சிலருக்கும் உத்தியோகங்களைக் கொடுத்தான். வேறு சாதியினர் உத்தியோக உடைதரிப்பதை வேளாளர் விரும்பவில்லை. யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் இடம்பெறும் பின்வரும் பகுதி அக்காலத்தில் யாழ்ப்பாணத்தவரின் உடை பற்றியெழுந்த பிரச்சினையை அறிய உதவுகின்றது.

"எளிய சாதிகள் தத்தம் உடைநடைகளை மாற்றத் தொடங்கியதைப் பற்றி அவன் (சுவாடக்குறூன்) பின்வருமாறு யாழ்ப்பாண அரசியற் சங்கத்தாருக்கு எழுதியிருக்கிறான் :

கீழ்சாதிகள் தங்கள் உடை முதலியவைகளைப் பற்றிய ஒழுங்குகளை அனுசரிக்கும்படி செய்யவேண்டும். இதிற் சில ஒழுங்கீனங்கள் உண்டாகியிருக்கிறதாகக் கேள்வி. இவர்கள் சரியான மாதிரிச் சீலை கட்டிக் கொள்ளுகிறார்கள் இல்லை. தலைமயிரை வெட்டாமலும், காதிற் பொன்கம்பிகள் போடாமலும் திரிகிறார்கள். இதினால் இவர்களை யாரென்று தெரியாமற் போகிறதென்றும், இது தங்களுக்கு ஒரு அவமானமென்றும் சாதியாளரான 'கொனாறாடர்ஸ்' (இவர்கள் மேல் சாதியினர் போலும்) முறைப்படுகிறார்கள். இவ்விஷயமாய் இலங்கைத் தேசாதிபதியாகிய லோறன்ஸ்பில் கவணரால் 1686ஆம் ஆண்டு ஆவணி மாதம் 18ஆம் திகதி ஓர் 'பிளக்காற்' கட்டளை பிறப்பிக்கப்பட்டது".[12]

சமூக மேலாதிக்கமுடையவர்களே வேட்டி, சால்வை, தலைப்பாகை (இதில் பலரகம்) அணிய அனுமதிக்கப்பட்டனர்.

காலனித்துவ அரசு சுதேசப்பிரபுக்களுக்கு அல்லது முதலியார்களுக்கென வரையறுக்கப்பட்ட சீருடைகளைப் பற்றிய விபரத்தினை உத்தியோகபூர்வமாகவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.[13]

படித்த மத்தியதர வர்க்கத்தினர் வேட்டியுடன் சேட், கோட் முதலியவற்றை அணிந்தனர். படிப்பின்மூலம் தம் அந்தஸ்தினை உயர்த்திக் கொண்டவர்கள், காலனித்துவ நிர்வாகப் பணியில் இணைந்த சுதேசிகள் வேட்டி அல்லது நீளக்காற்சட்டை, சேட், கோட் முதலியவற்றுடன்

தலைப்பாகையும் அணிந்தனர். காலனித்துவ பிரபுத்துவப் பாரம்பரியத்திற்கும் சுதேச மேலாண்மைப் பாரம்பரியத்திற் கும் அமைதிகாணும் வகையிலும் உடைகள் பயன்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்துச் சுதேசிகள் மிஷனரிமார் கொடுத்த ஆங்கிலக் கல்விப் பாரம்பரியத்தினால் விதேசிகள் ஆவதைப்பற்றி 1847ஆம் ஆண்டு மானிப்பாயில் வைத்தியப்பணியாற்றிய டாக்டர் கிறீன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "வேட்டி... காற்சட்டையாகவும், சால்வை.. மேற்சட்டையாகவும், தலைப்பாகை... தொப்பியாகவும், தாவரபோசனம்... மாமிச போசனமாகவும், மண்குடிசை... கல்வீடாகவும் மாற்றம் அடைகின்றன என்றே எண்ணுகின்றேன். கிறிஸ்தவர்கள் ஆகாமல் தேசியத்தை இழப்பவர்களையே நான் காண்கின்றேன்.[14]

டாக்டர் கிறீனின் கவலையெல்லாம் கிறிஸ்தவத்தை உண்மையாக உள்வாங்காமல், வெளித்தோற்றத்திலே ஐரோப்பியப் பண்பாட்டுக்கு மாறுகிறார்கள் என்பதாகவே அமைகின்றது. ஆனால், இக்கூற்றின் உள்ளீடாக அமைவது யாழ்ப்பாணச் சுதேசிகளின் பண்பாட்டு அடையாளமாக வேட்டி, சால்வை, தலைப்பாகை முதலியனவே கருதப்பட்டன என்பதாகும்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலே ஆண்களும் கொண்டை (குடுமி) வைத்திருந்தனர். மிக அண்மைக்காலம் வரை கிராமப்புறங் களிலே கொண்டை கட்டிய முதியவர்களைக் காணக்கூடியதாக இருந்தது. அரச உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் கொண்டை கட்டியிருப்பதைக் காலனித்துவ அரசு விரும்பவில்லை.[15]

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆண்கள் கொண்டை அல்லது குடுமியை அகற்றும் சங்கம் ஒன்று நிறுவிச் செயற்பட்டார்கள் என்பது சுவாரசியமான செய்தியாகும். யாழ்ப்பாணத்திலே (இலங்கையிலும்தான்) புகைப்படக்கலையை முதன்முதலாக அறிமுகப் படுத்திய கென்றி மாட்டின் என்பவரே இச்சங்கத்தின் தலைவராக

இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. கென்றி மாட்டினின் வரலாற்றை எழுதியவர் அவர் குடுமி அகற்றும் கழகத்தினை நிறுவியமை பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

"ஐம்பத் தெட்டி லழகிய நகரிடை *(1858)*
பம்மிய ஆடவர் பலரையு மழைத்துச்
சபையொன்று கூட்டிச் சான்றோனாமவர்
ஆண்பாலார்கள் அழகுறு பெண்கள் போல்
கொண்டை வளர்த்துக் குடுமி கட்டுதல்
அழகல வென்று ஐரோப்பியர் போல்
கிறீல்விடும் வழக்கைக் கேடற வைத்தனர்"[16]

ஐரோப்பியரின் நடையுடைகளை யாழ்ப்பாணத்தவர்கள் பிரக்ஞைபூர்வமாகவே பின்பற்றினர் என்பதற்கு மேற்காட்டிய பகுதி சான்றாக அமைகின்றது.

கிறிஸ்தவத்தைத் தழுவியர்களிற் பலர் சுதேசிய, விதேசிய உடைகளைக் கலந்து பயன்படுத்தினர். தமது பாரம்பரியப் பண்பாட்டு அடையாளங்கள் சிலவற்றை இழக்க விரும்பாத மனநிலையிலேயே அவர்கள் இருந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் பலவுள. வகை மாதிரிக்கு வண. முருகப்பா சதாசிவம் (Rev. Thomas peter Hunt) என்பவரின் வாழ்க்கை வரலாற்று நூலில் இடம்பெறுவதைச் சுட்டிக்காட்டலாம்.

"அவருடைய (Hunt) உடை எப்போதும் ஒரே தன்மையதே. கொய்யப்பட்ட ஒற்றைப்பட்டு வேஷ்டியை உடுத்து, தலையிற் 'பழையகாட்' லேஞ்சி தலைப்பாகையாகக் கட்டி, பொத்தான் வெளியே தோற்றும் மூடுசட்டை போட்டுச் சாதாரண செருப்போடு வெள்ளை உறைபரவிய கறுப்புக் குடையுமே இவரது சபை சந்திக்குரிய உடுப்பு. தூது வளங்காய்ப் பரிமாணமான கடுக்கன் ஒரு சோடு இவர் காதில் மரணபரியந்தம் தொங்கியது"[17]

யாழ்ப்பாணத்து ஆடவர்களிற் பலர் குடுமியுடனும், கடுக்கனுடனும் இருந்தார்கள் என்பதை இன்றைய தலைமுறையினர் அறிய

மாட்டார்கள். இந்த மரபு இப்போது சற்று வேறுபட்ட கோலத்திற் புலம் பெயர் இளைஞர்களிடையே காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. 19ஆம் நூற்றாண்டில் ஆண்கள் கடுக்கன் அணிந்தமை அவர்களது பொருளாதாரச் சிறப்பின் அடையாளமாகவும் அமைந்ததெனலாம். எல்லா ஆண்களும் கடுக்கன் அணிந்தார்கள் என்று கூறமுடியாது. யாழ்ப்பாணச் சமூகத்திலே 'பொன்'சேமிப்பின் அடையாளமாகவும் விளங்கியது. பணத்தேவை ஏற்படும்பொழுது தம்மிடமுள்ள பொன் ஆபரணங்களை விற்றோ அல்லது அடகுவைத்தோ பணம்பெறும் வழக்கமும் இருந்தது. உதாரணமாக முருகப்பா என்பவரின் வாழ்க்கைச் சம்பவம் ஒன்றைச் சுட்டிக்காட்டலாம்.

> "முருகப்பா பிள்ளைகளின் கல்விப் பயிற்சியின் வாஞ்சையினாலும் பொருட்கஷ்டத்தினாலும் தான் அணிந்திருந்த கடுக்கன்களைக் கழற்றி விற்று, ஒருபாரத ஏடு வாங்கிப் பிள்ளைகள் படிப்பதற் காகக் கொடுத்தார்" [18]

இம்மேற்கோளில் இரண்டு உண்மைகள் பொதிந்து கிடப்பதை அவதானிக்கமுடிகின்றது. ஒன்று: யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்காக வாழ்வை அர்ப்பணித்தனர் என்பது. இரண்டு : ஒருசோடி கடுக்கன்களின் பெறுமதி ஒரு மகாபாரத ஏட்டிற்கு இருந்தது என்பது யாழ்ப்பாண மக்கள் 'பொன்விலை' கொடுத்தே கல்வியைப் பெற்றனர் என்பதற்கு இது சான்றாகும்.

ஆண்கள் அரைஞாண் கொடி கட்டும் வழக்காறும் நம்மிடையே இருந்தது. வசதிபடைத்தவர்கள் வெள்ளியினால் ஆன அரைஞாண் கொடியினைக் கட்டுவர். ஆண்கள் இப்போது அரைஞாண் கொடி கட்டும் வழக்கம் முற்றாகவே அருகிவிட்டது எனலாம். ஆனால் இன்றும் குழந்தைகளுக்கு அரைஞாண் சங்கிலி, பஞ்சாயுதமும் சங்கிலியும் முதலான அணிகலன்கள் அணியப்படுவதையும் காணலாம்.

ஆங்கிலக்கல்வி, அதன்வழிவந்த பதவிகள் காரணமாக யாழ்ப்பாணச் சமூக அடிநிலை மக்களின் ஆடைஅணிகலன்களிலே பல மாற்றங்கள் உண்டாயின. சாதிப்பாகுபாடு பலமாக நிலவிய சமூகத்திலே

இம்மாற்றம் ஏற்றுக்கொள்ள முடியாததாய், சீரணிக்க முடியாததாய் இருந்தமைபற்றி இலக்கியங்கள் நிறையவே பேசுகின்றன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே எழுந்த இலக்கியமொன்றிலே

"வண்ணார், வடுகர், பணிக்கர், பண்டாரம்,
மடப்பளியார், பரதேசிகள் சட்டையும்
எண்ணுஞ் சரிகை யுறுமாலுப் போட்டிப்போ
யான் பிரபென்கிறார் பாருமடி"[19]

இவ்வாறு பாடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வேளாள சமூகத்தின் மேலாண்மை மெல்லமெல்லக் கீழிறங்குவதைக்கண்டு சகிக்காத உள்ளத்தின் குமுறலாக இப்பாடலை அடையாளம் காணலாம்.

**பெண்களின் உடைகளும் அணிகலன்களும்**

யாழ்ப்பாணப் பிரதேசத்திற் பெண்களின் உடைகள் எல்லாக் கிராமங்களுக்கும் ஒரே தன்மைத்தாக இருந்தது என்று கூறமுடியாது. உடைகளை உடுக்கும் விதத்தில் வேறுபாடுகள் காணப்பட்டன. யாழ்ப்பாணச் சமூகத்திலே உயர்சாதிப் பெண்கள் உடுக்கும் உடைக்கும். அடிநிலைச் சமூகப் பெண்கள் உடுக்கும் உடைக்கும் உடுக்கும் முறைமை யிலே வேறுபாடுகள் காணப்பட்டன. பெரும்பாலான உயர்சாதிப் பெண்கள் சேலை உடுத்து (சாறி) மேற்சட்டை அணிந்திருந்தனர். சிலர் சேலையை இடுப்பிலே கட்டித் தொங்கலை மார்பை மூடிப்போட்டுப் புறத்தாலே சுற்றிக்கட்டி இருப்பர்.

அடிநிலைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் குறுக்குக் கட்டாகக் கட்டி இருப்பர் (இதற்குப் புறநடையும் உண்டு). அடிநிலைச் சமூக ஏழைப்பெண்களின் உடைபற்றிக் காதலியாற்றுப்படை "கந்தை உடையினர் குறுக்குக்கட்டினர்" எனக் குறிப்பிடுவதை இவ்விடத்திலே நினைவு கூரலாம்.

யாழ்ப்பாணத்துப் பெண்களின் உடைப்பாரம்பரியம் பற்றித் திருமதி ஹரியற் வின்சிலோ அம்மையார் பின்வருமாறு குறிப்பிடுவர்.

"பெண்கள் சேலையை இடுப்பில் உடுத்து இன்னொரு பகுதியால் தங்கள் மார்பை மறைத்துக் கட்டுவார்கள். மிகுதியான துண்டால் தங்கள் தோளைப்போர்த்துவார்கள்........ தாழ்த்தப்பட்ட வகுப்பில் உள்ள பெண்கள் தங்கள் உடம்பின் மேற்பகுதியை மூடுவதற்குச் சமூகம் அனுமதி அளிப்பதில்லை"[20]

தாழ்த்தப்பட்ட வகுப்பில் உள்ள பெண்கள் தங்கள் உடம்பின் மேற்பகுதியைமூட அனுமதிக்காமை, குரூரமான சமூக அடக்குமுறை யென்பதையே புலப்படுத்தி நிற்கின்றது. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவிலே தோன்றிய ஆக்க இலக்கியங்களில் இவ்விடயம் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1830ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதி திருமதி வின்சிலோ அம்மையார் தமது சகோதரனுக்கு எழுதிய கடிதத்தில் யாழ்ப்பாணத்துப் பெண்களின் உடையைப்பற்றிக் குறிப்பிடுவது மிகுந்த அவதானிப்புக் குரியது.

"சுதேச கிறிஸ்தவர்கள் எங்களைச் சேர்ந்ததும் தங்கள் உடையை மாற்றுவதில்லை. நாங்களும் அதனை விரும்புவதில்லை. பெண்கள் தங்கள் இடுப்புவரை ஒரு சேலையைக் கட்டி, அதன் ஒரு பகுதியால் தங்கள் தோள்களை மூடுவார்கள். எங்கள் கூட்டங்களுக்கு வரும்போது நாணயமாக உடுத்தி வருவார்கள். பொதுவாக அமெரிக்கப் பெண்களைவிட இவர்களின் நடைத்தூய்மை குறிப்பிடத்தக்கது. இங்குள்ள பெண்கள் தங்கள் கைகளையும், கால்களையும் தவிர்த்து உடல் முழுவதையும் துணியால் முறைப்படி மூடிக்கொள்வார்கள். கடுங்காற்று வீசித் தங்களை விழுத்தினாலும் பிறர்பார்வைக்கு இவர்களின் உடல் தென்படாதவாறு இவர்களின் உடை சீராக இருக்கும்".[21]

மேலைத்தேசத்தைச் சேர்ந்தபெண் ஒருவர் யாழ்ப்பாணத்துப் பெண்களின் உடையைப்பற்றி இவ்வாறு கூறுவது மிகவும் முக்கியமானது. கிறிஸ்தவத்தின் செல்வாக்கு ஆரம்பத்தில் பெண்களின் உடையில் பெருமளவு மாற்றத்தைக் கொண்டுவரவில்லை என்பதைத் திருமதி

வின்சிலோவின் கூற்றுமெய்ப்பிக்கிறது. ஆனால் நாளடைவில் பெண்களின் உடையிலே கிறிஸ்தவத்தின் செல்வாக்குக் கணிசமானளவு இடத்தைப் பிடித்துக்கொண்டது.

19ஆம் நூற்றாண்டில் உயர்சாதிப் பெண்களும், கிறிஸ்தவத்தோடு இணைந்துகொண்ட பெண்களுமே மேற்சட்டைபோடும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள் என்பதை மிஷனரிமார் பல்வேறு இடங்களிலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணப் பிரதேசத்துப் பெண்கள் பொன், வெள்ளி, செம்பு முதலானவற்றால் ஆன ஆபரணங்களையே அணிந்தனர். பெண்களின் தகுதியை (தராதரத்தை) அணிகலன்களே தீர்மானித்தன எனலாம். பொருளாதார வசதி படைத்தவர்களே பெரும்பாலும் பொன் ஆபரணங்களை அணிந்தனர். ஓரளவு வசதியுடையோர், வெள்ளி, செம்பு, (பித்தளை) முதலானவற்றை அணிந்தனர். ஏழைகள், அடிநிலைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆபரணங்களை அணிந்ததாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணச் சமூகத்தின் சேமிப்பாகப் பொன் ஆபரணங்களே இருந்தன என்பதை ஏலவே குறிப்பிட்டோம். பொன்னாற் செய்யப்பட்ட ஆபரணங்களைப் பட்டியல் இடுவது சாத்தியமற்றது. வகைமாதிரிக்குக் காதலியாற்றுப் படையில் வரும் பின்வரும் பகுதியைச் சுட்டிக் காட்டலாம்.

"............ தாலியும்
அட்டியல் பதக்கம் பிலாக்கு மூக்குத்தி
பூரானட்டியல் கீச்சுக்கல் அட்டியல்
கடுகு மணிக் கொலுசு கவுத்தோர், காதுப்பூ
வாளி, சிமிக்கி, வளையல், தோடு
பட்டணங்காப்பு, பீலிக்காப்புப்
பாதசரமொடு சங்கிலிச் சிலம்பு
தூங்கு கடுக்கன் நட்டுவக்காலி
அரும்புமணி முருகு கொன்னைப்பூவும்
ஒட்டியாணம் ஒளிபெறுநுதலணி
அரைஞாண் கயிற்றொடு அரைமூடிசலங்கை" [22]

யாழ்ப்பாணப்பிரதேசப் பெண்கள் அணிந்த ஆபரணங்களின் பட்டியலைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை பிரக்ஞைபூர்வமாகவே பதிவு செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலே குறிப்பிடப்பட்ட ஆபரணங்களிற் பல இன்று பயன்பாட்டில் இல்லை. அவற்றுக்குப்பதிலாக வெவ்வேறு வடிவில் வெவ்வேறு வகையில் அணிகலன்கள் வந்துவிட்டன. 'அரைமூடி சலங்கை' என்ற அணிகலன் இப்பொழுது இல்லாமலே போய்விட்டது. அரைமூடிச்சலங்கைபற்றி மிஷனரிமாரின் குறிப்பொன்று பின்வருமாறு:

> "சிறுபிள்ளைகள் ஐந்து அல்லது ஆறு வயதுவரை, பொதுவாக எவ்வித உடுப்பும் உடுத்துவதில்லை. இப்பிள்ளைகளின் அரையில் கயிறு அல்லது வெள்ளிச் சங்கிலி கட்டித் தங்கள் பிறப்புறுப்பை மறைக்க இரண்டு மணிகளை அணிவார்கள். அவர்கள் நடக்கும்போது இவை கலகலவென ஒலிக்கும்". [23]

அணிகலன்கள் எமது பண்பாட்டுத் தளத்தில் மிகுந்த பெறுமதி யுடையனவாய் இருந்தன என்பதை மறுக்கமுடியாது. ஒருகாலத்தில் பெண்களின் அழகைமாத்திரமல்ல, சமூகப் பெறுமானத்தையும் பொன் ஆபரணங்களே தீர்மானித்தன என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

இந்தப் பொன் அணிகலன்களுக்குப் பின்னால் கைவினைக் கலைஞர்களின் அழகியல் உணர்வும், ஆக்கத்திறனும் நுட்பமான விவேகமும் இருந்தன என்பதை இலக்கியங்களோ வேறு ஆவணங்களோ பதிவு செய்யாமை எமது சமூகத்தளத்தின் பண்பாட்டுப் பலவீனத்தையே காட்டிநிற்கிறது.

**உறையுள் (வீடு)**

யாழ்ப்பாணப்பிரதேசமக்களின் பாண்பாட்டுக் கோலங்களிலே வீடுமுக்கிய இடத்தினைப் பெறுகின்றது. மனித இனத்தின் வரலாற்றிலேயே உணவுக்கு அடுத்தபடியாக உறையுளே முக்கிய இடம் பெறுகின்றது. யாழ்ப்பாணச் சமூகத்திலே வீடும் வளவும் என்றதொடர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. குடும்பத்தின் வாழ்வியலுக்கு வீடுமாத்திரமன்றி வளவும் அத்தியாவசியமானதாக இருந்தது. வீட்டைச்

சூழவுள்ள பகுதியை, அல்லது வீடு அமைந்திருக்கும் காணியையே வளவு என்று அழைத்தனர். வளவிலே பயன் தருமரங்கள், நிழல்மரங்கள் முதலியவற்றை வளர்த்திருப்பார்கள். அத்துடன் ஆடு, மாடு முதலியவற்றிற்கும் கொட்டில்கள் அமைத்திருப்பர். வீடுவாசல் என வழங்கும் தொடரிலும் "வாசல்" என்றபதம் வளவை அல்லது முற்றத்தைக் குறித்து நின்றது எனலாம்.

குடும்பப் பொருளாதார நிலைகளுக்கு ஏற்பவே வீடுகளும் அமைந்தன. வறிய, அடிநிலைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் குடிசைகளையும், சிறிய மண்வீடுகளையும் பயன்படுத்தினர். ஓரளவுக்குப் பொருளாதார வசதியுடையவர்கள் சற்று விசாலமான மண்வீடுகளைக் கட்டி வாழ்ந்தனர். மண்வீடுகளிலும் பலவகைகள் (அமைப்பு) இருந்தன. முட்டச்சுவர், அரைச்சுவர் என மண்ணினாலே சுவர்வைத்துக் கூரையைப் பனையோலையாலோ, தென்னோலையாலோ (கிடுகு) வேய்ந்து, சுவரையும் தரையையும் அழகாகமெழுகிப் பயன்படுத்தினர். திணணை, மால் (இதனைத் தலைவாசல் என அழைக்கும் வழக்கமும் இருந்தது) மண்வீடுகளிலே இருந்தன. திண்ணை, மால் முதலியன இப்பிரதேச மக்களின் பண்பாட்டு இயல்புகளைக் கண்டறிய உதவும் அடையாளங்கள் எனலாம்.

மண்வீட்டைப் பயன்படுத்தியவர்கள் பொருளாதார வசதி பெருக, செங்கல், சுண்ணாம்பு, சாந்து முதலியவற்றைப் பயன்படுத்திச் சற்று வசதியான வீடுகள் அமைத்தனர். பெரும்பாலும் சமூக மேலாண்மை பெற்றவர்களே இத்தகைய வீடுகளில் வாழ்ந்தனர். 19ஆம் நூற்றாண்டில் செங்கல், ஓடு, வீட்டுக்குத்தேவையான மரங்கள் (பலகை தீராந்திகள்) பிறநாடுகளில் இருந்து யாழ்ப்பாணத்திற்குப் பருத்தித்துறை, ஊர்காவற்றுறைமுதலிய துறைமுகங்களினூடு வந்திறங்கின. இவற்றைப் பயன்படுத்திக் கட்டியவீடுகள் சில இன்று சிதைந்த நிலையிலே காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. பருத்தித்துறை, வல்வெட்டித்துறை முதலிய இடங்களிலே வணிகர்கள் கட்டிய வீடுகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களே பெருமளவுக்குப் பயன்படுத்தப்

பட்டன என்று கள ஆய்வின்போது அறிய முடிந்தது. குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் இத்தன்மை காணப்பட்டது.

ஐரோப்பியர் வருகையை ஒட்டி யாழ்ப்பாணத்து வீட்டுக்கட்டிட அமைப்புக்களில் மாற்றங்கள் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

"காற்று, வெய்யில், மழை, வெளிச்சம் முதலானவற்றை மனங்கொண்டு மூன்றலகுவீடுகள், நாற்சாரும் வீடுகள் என யாழ்ப்பாணத்திலே பலவகையான வீடுகள் கட்டப்பட்டன. அடுக்களை (சமையற் கூடம்) எப்பொழுதும் தனியாகவே அமைக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்து வீடுகளின் அமைப்பு இப்பிரதேசத்தின் பண்பாட்டுக் கோலத்தின் வெளிப்பாடாகவும் இருந்தது. உதாரணமாக, நாற்சாரும் வீடும் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையின் வெளிப்பாடு எனக் குறிப்பிட லாம். யாழ்ப்பாணத்துவீடுகளின் பின்னணியில் சமூக பொருளாதாரக் கட்டமைப்பு எத்தகைய செல்வாக்குச் செலுத்தியது என்பதை அகிலனின் யாழ்ப்பாணத்து மூவலகுவீடுகள் என்னும் கட்டுரை தெளிவாகப் புலப்படுத்துகின்றது."[24]

யாழ்ப்பாணத்து வீடுகள் பற்றி மிஷனரிமார் எழுதிய குறிப்புக்கள் மிகுந்த அவதானிப்புக்குரியவை. 1820 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்த மிஷனரி ஒருவர்தான் அவதானித்த வீடுகள் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "வீடுகள் பொதுவாகப் பதிவானவை. சுவர்கள் சாந்து பூசப்பட்டவை. வெளியிலும் உட்புறத்திலும் வெள்ளையடிப்பது வழக்கம்...
>
> .. இங்குள்ளவர்களின் வீடுகள் பொதுவாகக் குடிசைகளாய் இருந்தன. சிலரின் வீடுகளின் நடுவில் ஒரு முற்றம் இருந்தது. மற்றப்பக்கங்களில் வீட்டின் ஏனைய பகுதிகள் இருந்தன. இவ்வீடுகள் பிரிந்திருந்த சுவரையுடன், பக்கங்களில் மரக்கால்கள் தாங்கிக் கொண்டிருந்தன. பனை ஓலைகளால் வீட்டின் கூரை வேயப்பட்டிருந்தது. சில இடங்களில் தென்னோலைகளால் மூடப்பட்டிருந்தன. சில இடங்களில் நாலுபக்கங்களிலும்

விறாந்ததைபோல் பத்தி இறக்கப்பட்டுள்ளது. இந்த வீடுகளின் நிலம் களிமண்ணால் செய்யப்பட்டுள்ளது. அதுமிகவும் கெட்டியாய் அமைந்துள்ளது. வெளிப்புற விறாந்தை வசதியாய் இருப்பதற்கும், வேலை செய்வற்கும் சிலவேளைகளில் படுத்துறங்குவதற்கும் பாவிக்கப்படுகிறது.

வீட்டின் உட்புறம் சில இடங்களில் வெவ்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு பகுதியில் ஒரு அறைபோல் செய்யப் பட்டு, வீட்டாரின் பெறுமதியான சாமான்கள் போடப்பட்டுப் பூட்டுவதற்கேற்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மற்றப்பகுதிகள் திறந்தபடியே உள்ளன. சிலவேளைகளில் ஓலைத்தட்டிகளாற் தற்காலிகமாகப் பிரிக்கப்படுவதுமுண்டு. இரண்டு அல்லது மூன்று குடும்பங்கள் சேர்ந்து வாழும் நாற்சதுரவீடும் (நாற்சாரும் வீடு ) அமைந்துள்ளது"[25]

மேற்காட்டிய இந்த நிண்ட விபரணக் குறிப்பு யாழ்ப்பாணத்து மக்களின் வீட்டுக்கட்டிடக் (கலை) அமைப்புபற்றி மாத்திரம் பேசவில்லை. இவர்களின் வாழ்வியல் எத்தகைய சமூக உறவுடன் திகழ்ந்தது என்பதையும் குறிப்பாகச் சுட்டி நிற்கின்றது. இத்தகைய வீட்டு அமைப்பு இப்போது அருகிவிட்டது. இத்தகைய வீடுகளின் சுத்தம், அழகுபற்றி மிஷனரிமார் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளனர்.

சாந்து, சுண்ணாம்பு முதலியவற்றைக் கொண்டு கட்டப்பட்ட வீடுகளைக் கல்வீடு என்றே அழைத்தனர். அக்காலத்தில் கல்வீடுகள் மிகமிக அருந்தலாகவே காணப்பட்டன. பொருளாதார வளமுடைய மேற்தட்டு மக்களே பெரும்பாலும் கல்வீடுகளில் வாழ்ந்தனர். காலப்போக்கில் சீமெந்தின் வருகையுடன் வீடுகள் பல்வேறு பாணிகளில் அமையத் தொடங்கின. போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய பாணிவீடுகள் என இங்கு உள்ளவீடுகளின் பாணிகளைக் குறிப்பிடும் வழக்காறும் உண்டு.

வீட்டு வளவின் வாசலுக்குச் சங்கடப் படலை என்ற கேற் அமைக்கப்பட்டிருந்தது. இந்தப் படலையை மூடிமேலே கூரை

போடப்பட்டிருந்தது. இக்கூரை சங்கடப்படலையின் பாதுகாப்புக்குப் பயன்பட்டதோடு, வழிப்போக்கர்கள் இளைப்பாறிச் செல்லவும் உதவியமை குறிப்பிடத்தக்கது. சில இடங்களில் சங்கடப் படலைக் கூரைக்குக் கீழே வெளிப்புறமாக இருமருங்கும் திண்ணைகள் அமைக்கப்பட்டிருந்தன. இத்திண்ணைகளையே வழிப்போக்கர்கள் பெரும்பாலும் இளைப்பாறப் பயன்படுத்துவர். யாழ்ப்பாணத்திலே ஒரு காலத்தில் நிலவிய மனித நேயத்திற்கும் சமூகப் பொறுப்புணர்வுக்கும் இச்சங்கடப் படலைத் திண்ணைகள் சாட்சிகளாய் விளங்கின.

'நல்லநாள் பெருநாள்' என்று உறவினர்கள் வந்து உணவருந்தக் கூடிய (பந்தியாக இருந்தது) வகையிலே வீட்டின் ஒரு பகுதி அமைக்கப்பட்டதும் உண்டு. யாழ்ப்பாணத்துப் பெரியவர் ஒருவரின் சரமகவியில் "வீட்டில் விருந்தோம்ப விந்தையுடன் கூட மொன்றை நாட்டில் முன்மாதிரியாய் நன்கமைத்தாய்" என்று இடம் பெறுவதையும் இவ்விடத்திலே சுட்டிக்காட்டலாம். யாழ்ப்பாணத்திலே சபை சந்திக்குரிய வீடாகக் கட்டவேண்டுமென்ற மனநிலை இன்றும் இருப்பதை அவதானிக்கலாம். காலச் சூழ்நிலைக்கேற்ப யாழ்ப்பாணத்து வீடுகளின் அமைப்புக்கள் மாறிக் கொண்டே வருகின்றன.

**பொருளியல் – புழங்குபொருட்கள் – போக்குவரத்து**

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்களிலே பொருளியல், புழங்குபொருட்கள், போக்குவரத்து என்பவை ஒன்றுடன் ஒன்று நெருக்கமான தொடர்புடையவையாகவே காணப்படுகின்றன. எனவே இவற்றைத் தனித்தனியே குறிப்பிடாது ஒன்றாகவே குறிப்பிடுகிறோம்.

யாழ்ப்பாணத்துப் பொருளியல் அமைப்புப் பெரும்பாலும் விவசாயமாகவே இருந்தது. அவற்றை மேட்டுநிலப் பயிர்ச்செய்கை பள்ளநிலப்பயிர்ச் செய்கை எனப்பகுக்கலாம். கரையோரப் பகுதிகளில் மீன்பிடி முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக இருந்தது. இவை பற்றி யாழ்ப்பாணத்து உணவுப்பழக்கங்கள் பற்றிக் கூறிய விடத்து விரிவாக விளக்கியுள்ளோம்.

யாழ்ப்பாணத்துவிவசாய, பொருளாதாரப் பண்பாட்டில் புகையிலைச் செய்கைக்கு முக்கியமானதோர் இடமுண்டு. யாழ்ப்பாணத்து மண்வளம் புகையிலைச் செய்கைக்கு மிகவும் உகந்ததாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. காசுப்பயிரான புகையிலைச் செய்கை யாழ்ப்பாணத் திலே புதிய பணக்காரவர்க்க மொன்றினை உருவாக்கியது. யாழ்ப்பாணத் தில் இருந்து புகையிலை தென் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. அதிக வருமானந்தரும் புகையிலை வெண்காயம் முதலான பயிர்ச் செய்கைகளினால் நிலவுடைமையாளரும் வணிகர்களுமே அதிக பயனைப் பெற்றனர்.

யாழ்ப்பாணத்துப் பொருளாதார வளர்ச்சியிலே புகையிலைப் பயிர் பெரியபங்களிப்பினைச் செய்துள்ளது. புகையிலை பயிரிடப்பட்டவர் களிலும் பார்க்கப் புகையிலையைத் தென்இலங்கைக்கும், மலையாளத் திற்கும் ஏற்றுமதி செய்தவர்கள் பெரும் பணக்காரர்கள் ஆனார்கள். தென் இலங்கையிலே (சுருட்டுக்கடை, புகையிலைக்கடை) புகையிலையைப் பிரதான விற்பனைப் பொருளாகக் கொண்டு கடைகள் பல தோன்றின. இதனால் உள்ளூர் முதலாளித்துவச் சமூக மொன்று யாழ்ப்பாணத் தீபகற்பத்திலே உருவாகியது.

புகையிலையின் வருகை சுருட்டுக்கைத்தொழில் என்ற தொழில் வகையையும் உருவாக்கியது. சுருட்டுக்கைத்தொழில் நிலையங்கள் 'சுருட்டுக் கொட்டில்கள்' என்ற பெயரால் அழைக்கப்பட்டன. சுருட்டுக் கொட்டில்களில் ஒரு 'படிப்புப்' பாரம் பரியமும் யாழ்ப்பாணத்திலே நிலவியமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் 'படிப்புப்' பெற்றிருந்த முக்கியத்துவத்தினைச் சுருட்டுக் கொட்டில் வாசிப்பும் சுட்டி நிற்கிறது எனலாம். பெரிய எழுத்து மகாபாரதம் இராமாயணம், நல்லதங்காள், விக்கிரமாதித்தன் கதைகள் முதலியன சுருட்டுக் கொட்டில்களிலே வாசித்துக் காட்டப்பட்டன என அறியமுடிகின்றது. ஒருவகையிலே புராணப்படிப்பு முறைபோல் 'இவ்வாசிப்பு மரபு' அமைந்தது எனக் கருதலாம். பிற்காலத்தில் தினசரிப் பத்திரிகை வாசிப்பதாக இம்மரபு மாற்றம் பெற்றது என்பர்.

யாழ்ப்பாணத்துப் பொருளியற் பண்பாட்டோடு மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்த புழங்குபொருட் பயன்பாடுகள் மிகவும் முக்கியமானவை. புழங்கு பொருட்களைப் பயன்பாட்டுப் பொருட்கள் என்றும் கூறுவர். "பண்பாட்டின் கண்ணாடி புழங்கு பொருட்கள்" என்று பண்பாட்டு ஆய்வாளர்கள் கூறுவர்.[26] யாழ்ப்பாணத்திலே பயன்படுத்தப் பட்ட புழங்கு பொருட்கள் இப்பிரதேச மக்களின் பண்பாட்டுக் கோலங்கள் பலவற்றைத் தெளிவுபடுத்துகின்றன.

புழங்குபொருட் பண்பாட்டினை இரண்டு தளங்களிலே நோக்கலாம்.
ஒன்று : சிறுகைத்தொழில் வகுப்பினரின் பொருளியல் சார்ந்தது
இரண்டு: புழங்கு பொருட் பாவனையாளர்களைச் சார்ந்தது.

புழங்குபொருள் உற்பத்தியாளர்கள் தமக்கு வருமானம் ஈட்டித் தரும் தொழிலாக மாத்திரம் செய்யாது, தமதும் பாவனையாளர்களினதும் அழகியல் உணர்வுகளையும் அதிலே பயன்படுத்தியமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பனம் பொருட்களைக் கொண்டு செய்யப்படும் புழங்கு பொருட்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை. பனையோலையினாற் செய்யப்படும் புழங்கு பொருட்களிலே அழகியல் அமிசங்களும் பொருந்தியிருந்தன. பனையோலையாற் செய்யப்பட்டபுழங்கு பொருட்களிலே அழகியல் அமிசங்களும் பொருந்தியருந்தன. பனையோலையாற் செய்யப்பட்ட புழங்கு பொருட்களைப் பட்டியல் இடுவது நமது நோக்கமன்று. பனைஒலையாற் செய்யப்பட்ட புழங்கு பொருட்கள் சிலவற்றைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை பதிவு செய்துள்ளார்:

"அழகுறு வன்னம் அமைவுறப் போட்டுத்
தொழிலமை வனிதையர் திறமையோடிழைத்த
பெட்டி, பாய், குட்டான், பெயர்பெறு கதிர்ப்பாய்
அடுக்குப் பெட்டியும் அருவிலை மூடலும்

பிட்டவி நீத்துப் பெட்டியும் சுண்டும்
பனையின் குருத்தைப் பதனமாய் வார்ந்து
பன்னிறந் தீட்டிய பன்னோலை கொண்டு
கைவல் லிளையர் கருதி யிழைத்த
ஆனைப் பெட்டியு மழகிய தேரும்
கொட்டைப் பெட்டியுங் கிலுக்குப் பெட்டியும்[27]

மேலே குறிப்பிட்டவற்றுள் இடம்பெறும் பலபொருட்கள் இன்று பயன்பாட்டில் இல்லை. உதாரணமாகக் கொட்டைப் பெட்டி என்பதை இன்றைய தலைமுறையினரிற் பலர் அறியமாட்டார்கள். ஒரு காலத்தில் பல்வேறு பாவனைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட 'உமல்' என்பது இன்று பயன்பாட்டில் இல்லை. 19 ஆம் நூற்றாண்டிலே மிஷனரிமார் எழுதி வெளியிட்ட பாலபோதம் என்னும் பாடப்புத்தகத்தில் 'உமலின்' பயன்பாடு பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.[28]

உலோகத் தொழிலைப் பொறுத்தவரையில் விவசாயத்திற்கும் வீட்டுப்பாவனைக்குமுரிய உபகரணங்கள் இரும்பினாற் செய்யப்பட்டன. கத்தி, கோடரி, சத்தகம், மண்வெட்டி, பாக்குவெட்டி, கலப்பைக்கொழு, குத்தூசி, எழுத்தாணி முதலியன இங்குள்ள கைவினைக் கலைஞர்களாற் செய்யப்பட்டன. இவற்றின் தரத்திலும் அமைப்பிலும் அழகியலோடு ஒட்டித் தமது நுட்பமான தொழிற்திறன்களையும் வெளிக்காட்டினார்.

செம்பு, பித்தளை, வெள்ளி புழங்கு பொருட்களும் சமய கரணத்தோடு தொடர்புடைய பயன்பாட்டுப் பொருட்களும் செய்யப்பட்டன. தாம்பாளம் (தட்டம்) விளக்கு வட்டில் வெற்றிலைத் தட்டு முதலான உலோகப் பொருட்களிலே அழகியல் அமிசம் சிறப்பாகப் போணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

பொன் வெள்ளி முதலியவைகளில் அழகிய வேலைப் பாட்டுன் கூடிய ஆபரணங்களைப் பொன் வினைக்கலைஞர்கள் செய்தமை பற்றி ஏலவே குறிப்பிட்டோம். யாழ்ப்பாணத்துக் கைவினைக் கலைஞர்கள் பற்றிப் பல்டேயஸ் குறிப்பிடுவது மிகுந்த அவதானிப்புக்கு உரியது.

"தந்தம் கருங்காலி முதலியவைகளிலும் பொன், வெள்ளிகளிலும் வேலை செய்வோர் ஒல்லாந்தருடைய வீடுகளில் வந்திருந்து வேலை செய்து கொடுப்பார்கள். இவர்களுடைய ஆயுதங்கள் மிகச் சொற்பம். ஆயினும் திறமான வேலை செய்வார்கள்"[29]

யாழ்ப்பாணத்திலே மரவேலைப்பொருட்களும் இரண்டு தளத்திலே செய்யப்பட்டன.

சமய கரணத் தேவைகளுக்குச் செய்யப்பட்ட சகடை, சப்பறம், வாகனம், திருவாசி முதலியன அழகியல் அம்சத்தோடு மாத்திரமன்றி அளவுப் பிரமாணத்தோடும் செய்யப்பட்டன.

வீட்டுத் தளபாடங்களான கதிரை, (நாற்காலி, முக்காலி) மேசை, பெட்டகம் முதலியன, பயன்பாட்டு அடிப்படையையும் அழகியல் அமிசத்தையும் உள்வாங்கிச் செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்திலே பெரும்பாலும் வசதியானவர்களிடம் உபயோகத்திலே இருந்த பண்பாடுசார் மரவேலைப்பொருளாகப் பெட்டகத்தினைக் குறிப்பிடலாம். பல்வேறு அளவுகளில், பல்வேறு அமைப்பில் பல்வேறு வகையான வேலைப் பாடுகளுடன் பெட்டகங்கள் செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்து வீட்டுப் பாவனைப் பொருட்களில் பெட்டகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாப்பாக வைக்கக்கூடிய வகையிலே பலம் பொருந்தியதாகவும் பெட்டகங்கள் இருந்தன. பெரியளவிலான பெட்டகத்தின்மேலே ஒருவர் படுத்து உறங்கலாம். இன்று மிக அருகிப்போன பெட்டகப் பயன்பாடு ஒரு காலத்திலே யாழ்ப்பாணத்தில் முக்கியம் வாய்ந்ததாக இருந்தது என்பதை இன்றைய இளந்தலை முறையினர் அறியமாட்டார்கள்.

மரவேலைப் பொருட்களின் முக்கியமான அம்சங்களில் வீட்டுக் கதவு நிலை, யன்னல் முதலியனவும் குறிப்பிடக்கூடியவை. இந்திய, இலங்கை, போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய பாணிகளில் மரச்சிற்பவேலைப்பாடுகள் யாழ்ப்பாணத்திலே இருந்தன எனக் கூறப்படுகின்றது. இவற்றின் எச்ச சொச்சங்கள் சிலவற்றை இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.

புழங்கு பொருட்கள் அல்லது பயன்பாட்டுப் பொருட்களின் அழகியல் அமிசம்பற்றிப் பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடுவதை இவ்விடத்திலே சுட்டிக் காட்டலாம் என்று எண்ணுகின்றேன்.

"........... பெட்டி, பாய், தளபாடம், தட்டம், விளக்கு, மாலை என வருவன. இவற்றுக்குக் கலை மாத்திரமே என்ற ஒரு தனிப்பரிமாணம் மட்டுமே இருக்காது. இவை பயன்பாட்டுப் பொருட்கள்தான். ஆனால் இவற்றின் அழகில், கவர்ச்சியில், வடிவில் தான் அவை பூரணத்துவம் பெறுகின்றன என்னும் திருப்தியுணர்வு இவற்றின் பயன்பாட்டில் முக்கியமானதாகும்...... யாழ்ப்பாணத்தின் இத்தகைய கலைகள் பற்றிய பட்டியலே நம்மிடம் இல்லை. அதாவது யாழ்ப்பாணத்தின் 'கைப்பணிக்கலை' பற்றிய விரிவான, தெளிவான அறிவு நம்மிடம் இல்லை".[30]

கைப்பணிக் கலைபற்றிய அறிவு நம்மிடம் இல்லாமற் போனமைக்கு முக்கிய காரணம் யாழ்ப்பாணத்துச் சாதி முறைமையே எனலாம். கைவினைக் கலைஞர்கள் கலைஞர்களாக நோக்கப்படாது அடிப்படையில் தொழிலாளர்களாகவே கருதப்பட்டனர். பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டுவந்த கைப்பணிக் கலை குலத் தொழிலாக வரையறுக்கப்பட்டிருந்தது. இதனால் வெவ்வேறு சாதி, யாரிடம் இக் கைப்பணிக்கலை பரிமாறப்படவில்லையென்பதும் குறிப் பிடத்தக்கது. இது எமது பண்பாட்டின் பலவீனத்தையே புலப்படுத்து கின்றது.

**போக்குவரத்து**

பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாக அமையும் போக்குவரத்துச் சாதனங்களும், பாதைகள் தெருக்களும் பொருள்சார் பண்பாட்டின் பாற்பட்டவையே எனலாம். ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியில் போக்கு வரத்துக்கு மிகவும் முக்கியத்துவம் உண்டு. இந்த வகையிலே யாழ்ப்பாணக் குடாநாட்டின் போக்குவரத்துச் சாதனங்கள் பற்றியும் போக்குவரத்துப் பாதைகள் பற்றியும் அவற்றோடொட்டிய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் நோக்குவது மிகவும் முக்கியமானது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் போக்குவரத்துச் சாதனங்களாக மாட்டு வண்டி, குதிரைவண்டி, றிக்ஷோ, வள்ளம், தோணி (வத்தை) முதலியவற்றைத் தொடர்ந்து மோட்டார்வண்டி, புகைவண்டி ஆகியன பயன்படுத்தப்பட்டன.

கால்நடையாகப் பாதசாரிகளாகப் பிரயாணம் செய்யும் வழக்கமே ஆரம்பத்தில் பெருவழக்காக இருந்தது. இவ்வாறு பயணிப்பவர்களை வழிப்போக்கர்கள் என்று அழைக்கும் வழக்காறும் உண்டு. கால்நடையாகப் பயணம் செய்பவர்கள் சுமந்துவரும் சுமைகளை இறக்கி வைத்து இளைப்பாற வீதியோரங்களில் சுமைதாங்கியும் மடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. பாதசாரிகள் இளைப்பாறுவதற்காக நிழல்தரு மரங்களும் வீதியோரங்களில் வளர்க்கப்பட்டிருந்தன.

சுமைதாங்கியுடன் கிணறு அல்லது கேணி, குளம் என்பனவும் அமைந்திருக்கும். வழிப்போக்கர்கள் மாத்திரமன்றி மாட்டுவண்டியிற் பயணிப்போரும் இவ்விடங்களிலேயே மாட்டை அவிழ்த்துக்கட்டி நீர் பருக விட்டு ஆறிச் செல்வது வழக்கம். இவ்விடங்களில் வண்டில் மாடுகளும் மேய்ச்சல் முடிந்து வரும் மாடுகளும் நீர் அருந்தித் தினவெடுக்கவென ஆவுரோஞ்சு தறிகளும் நாட்டப்பட்டிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் இன்றும் ஆவுரோஞ்சு தறிகளையும் சுமைதாங்கிகளையும் ஆங்காங்கே காணலாம். அவை பயன்பாடின்றி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வழிப்போக்கர்களுக்கும் கால்நடைகளுக்கும் பயன்படும் பொருட்டுக் கிணறு, குளம், கேணி, சுமைதாங்கி, மடம் முதலிய அமைக்கப்பட்டமை எமது பண்பாட்டின் சிறப்பான அமிசம் எனக் கொள்ளலாம். யாழ்ப்பாணத்து வீதியோர மடங்கள் இளைப்பாறுவதற்கும் பயன்பட்டமை உண்மையே. நெல்லியடியில் அமைந்திருந்த மடத்தி லிருந்து குடியரசு, கொம்யூனிசக் கருத்துக்கள் பற்றிய உரையாடல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. இன்றும் ஆறுகால்மடம், மருதனார்மடம், பூதர்மடம், கந்தர்மடம், நாய்வேலர்மடம் முதலான

இடப்பெயர்கள் தெருவோர மடங்கள் இருந்தமையை நினைவூட்டு கின்றன. நாய்வேலர்மடம் இன்று நாவலர்மடமாகப் பெயர்மாறியது எமது பண்பாட்டின் ஒரு பரிமாணமே எனலாம்.

மடப் பண்பாட்டில் தெருமூடிமடம் மிகவும் முக்கியமானது. வடமராட்சியில் நாமறிய இரண்டு இடங்களிலே தெருமூடி மடங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று இப்போது இல்லை. மற்றையது பருத்தித்துறை தும்பளைவீதியில் பசுதீஸ்வரர் ஆலயத்திற்கு அண்மையிலே உண்டு. இத்தெருமூடி மடத்தின் அருகிலே கிணறு, சுமைதாங்கி, ஆவுரோஞ்சுத்தறி ஆகியன உள்ளன. இத் தெருமூடி மடத்தினைப் பற்றிப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை குறிப்பிடுவதை இங்கே சுட்டிக் காட்டலாம் என்று எண்ணுகின்றேன்.

"தண்ணீர்ப் பந்தரும் தருமக்கிணறும்
ஆதீண்டு குற்றியு மரும்பூஞ் சோலையும்
வழிநடைபோகு மக்களும் மாக்களும்
வெயிலாள் வாடித் துயரடையாது
முகடு பாய்ச்சி மூடியுயர்த்தித்
திண்ணை வகுத்துக் கட்டிய நேர்தெரு
மூடிமடங்கள்..."

19ஆம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதிவரை யாழ்ப்பாணத்தில் தரைவழிப் பயணத்திற்கும் பாரம் ஏற்றுவதற்கும் மாட்டு வண்டில்களே பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டன. மாட்டு வண்டிகளிலும் பலவகை இருந்தன. இரட்டை மாட்டுவண்டில், ஒற்றைமாட்டு வண்டில் (ஒற்றைத் திருகல்) கூடார வண்டில், வில்லு வண்டில் என்பன குறிப்பிடத்தக்கன. கூடார வண்டில்கள் இன்று பயன்பாட்டில் இல்லை. மிகச் சிறுபான்மையாக வண்டில் பயன்பாடு இன்றும் உள்ளது.

யாழ்ப்பாணத்தில் எழுந்த இலக்கியங்கள் பலவற்றிலே மாட் வண்டில் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. காதலியாற்றுப்படையிலே பின்வருமாறு இடம்பெறுகின்றது.

"காய்ந்த வைக்கோலும் கனமணிநெல்லும்
ஆய்ந்து பாரம் ஆர வேற்றி
வைகுறு வேளை வலியநல் லெருது
பையென விழுத்துப் படரும் போதின்
அச்சுத் தேய்ந்த அருவிறற் சில்லுடை
வண்டி வரிசை வைத்திடு மோதையும்"

யாழ்ப்பாணத் தீபகற்பத்தைச் சூழவுள்ள தீவுகளுக்கான போக்குவரத்துச் சாதனமாகத் தோணி, வள்ளம் முதலியனவே பயன்படுத்தப்பட்டன. பண்ணைப் பாலம் கட்டுவதற்கு முன்னர் எல்லாத் தீவுகளுக்கும் கடற் பயணமே மேற்கொள்ளப்பட்டது. ஆபத்து நிறைந்த கடற் பகுதியைத் தாண்டிச் சிறுதோணிகளிலும் வள்ளங்களிலும் மக்கள் பயணம் செய்தமையை மண்டைதீவு அகிலேச சர்மாவின் பண்ணைப் பாலக்கும்பி விரிவாகப் பேசுகின்றது. இன்று நவீன இயந்திரப் படகுகள் பயன்பாட்டுக்கு வந்தபின் ஓரளவுக்குப் பயணம் இலகுவாயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறையில் இருந்து முல்லைத்தீவு, திருகோணமலை முதலிய இடங்களுக்கும் மக்கள் பாய்க்கப்பல் மூலமே (வத்தை) பயணம் செய்தனர் என்று அறிய முடிகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து இந்தியா, ரங்கூன், பர்மா முதலிய இடங்களுக்கு வணிகத்தின் பொருட்டுச் சென்றவர்களும் தோணிகளிலும் பாய்க்கப்பல்களிலுமே சென்றுவந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய பிரயாணங்களால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருளியல் அம்சங்களிலும் பண்பாட்டுப் பாரம்பரியங் களிலும் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டன எனலாம்.

மோட்டார்கார், புகைவண்டி முதலியவற்றின் பயன்பாடு யாழ்ப்பாணத்துப் பண்பாட்டிலே பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்தது. யாழ்ப்பாணத்துக்குப் புகைவண்டி வருவதைப் பலமாக எதிர்த்த ஒரு சாராரும் யாழ்ப்பாணத்திலே இருந்தனர் என்பது மிகுந்த

அவதானத்திற்குரியது. யாழ்ப்பாணத்துப் பண்பாட்டை, மரபிறுக்கத்தைப் புகைவண்டிப் போக்குவரத்துச் சிதைத்துவிடும் என்ற கருத்துடையவர்களே எதிர்ப்புத் தெரிவித்தனர். இதன்பின்னணியில் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பு இறுக்கமும் இருந்தது என்று கூறப்படுகின்றது. இக்கருத்து யாழ்ப்பாணத்துப் புனைகதை இலக்கியங்களிலேயும் பதிவாகியுள்ளது.

**பொருள் சாராப் பண்பாடுகள்**

பொருள் சார் பண்பாடும் பொருள்சாராப் பண்பாடும் ஏதோ ஒரு வகையில் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதை முன்னரே குறிப்பிட்டோம். பண்பாட்டு ஆய்வாளர்கள் ஆய்வு வசதி கருதி இவ்வாறான ஒரு பாகுபாட்டை மேற்கொண்டுள்ளனர். பண்பாடு என்பது பன்முகத்தன்மை கொண்டது என்ற வகையிலே இவ்வாறு பகுக்கப்படுகின்றது. பொருள் சாராப் பண்பாடு பற்றிப் பக்தவற்சலபாரதி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "பொருள் சாராப் பண்பாட்டில் பொருள்வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் இடம் பெறும் எடுத்துக்காட்டாகக் கருத்துக்கள் (Ideas) பழக்க வழக்கங்கள், நெறிமுறைகள், அறிதிறன், அழகியற்சிந்தனைகள், கற்பனை, நடிப்பு, இலக்கியங்கள், இசை, நடனம், உணவு உண்ணும்முறை, மந்திரங்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் போன்ற பொருள்வடிவம் பெறாத அனைத்தும் இதில் இடம் பெறும்."[1]

பொருள்சாராப் பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் இவ்வுரையிலே விளங்குவதென்பது சாத்தியமற்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வழக்கில் இருந்த - இருக்கும் பண்பாட்டு அம்சங்களில் நாம் மறந்து போன - மறைந்துபோன சிலவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம் என எண்ணுகின்றேன். இத்தகைய பண்பாட்டு அம்சங்களும் எம்மிடையே இருந்தன என்பதனை இன்றைய தலைமுறையினர் அறியவேண்டியது மிக அவசியமாகும்.

யாழ்ப்பாணத்துப் பொருள் சாராப் பண்பாடுகள் என்ற வகையில் மொழிசார் பண்பாட்டுக் கூறுகள், சடங்குகள், நம்பிக்கைகள், கலைமரபு

கள், கல்வி மரபுகள், விளையாட்டுக்கள் முதலானவற்றைச் சுருக்கமாகக் கோடிட்டுக் காட்டலாம். இவை தனித்தனியே விரிவாக ஆராயப்பட வேண்டியவை. விரிவஞ்சி விடுக்கின்றோம்.

**மொழிசார் பண்பாட்டுக் கூறுகள்:**

யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கெனத் தனித்துவமான, சிறப்பானதோர் மொழிப்பண்பாடு உண்டு எனக் கூறப்படுகின்றது. தமிழ் மொழிப் பயன்பாட்டில் "யாழ்ப்பாணத்தமிழ்" என அடையாளம் சுட்டும் மரபும் உண்டு. இலங்கையின் ஏனைய பகுதி ஆய்வாளர்களும் தமிழகத்து ஆய்வாளர்களும் "யாழ்ப்பாணத்தமிழ்" என ஒரு தனிவகை இருப்பதை ஒப்புக் கொண்டுள்ளனர். யாழ்ப்பாணத்துத் தமிழ் "நல்லதமிழ்" என்று கூறும் வழக்காறும் உண்டு. இராஜாஜியின் சிறுகதையில் வரும் சம்பவம் ஒன்று இதற்கு நல்லசான்றாகும்.

யாழ்ப்பாணத்து மொழிவழக்கில் எழுத்துமொழி பெரும்பாலும் ஒரே தன்மைத்தாகவே காணப்படுகின்றது. ஆனால் பேச்சுமொழியில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணப் பிரதேசத்தினுள்ளும் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பற்று ஆகிய பிரதேசங்களிலே வெவ்வேறு வகையான பேச்சுமொழி வழங்கி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று இவை பெரும்மளவுக்குக் குறைந்து விட்டன. கல்வி, மற்றும் போக்குவரத்து, சமூகமாற்றம், நவீனமயமாக்கல், பணிகள் முதலியவற்றால் இன்று யாழ்ப்பாணப் பிரதேசப் பேச்சுவழக்கில் பொதுத்தன்மை காணப்படுகின்றது. எனினும் சிற்சில பகுதிகளில் கிராமங்களில் இன்றும் தனித்தன்மையுடைய மொழிவழக்குப் பண்பாடு உண்டு என்பதையும் ஏற்றக்கொள்ள வேண்டும்.

ஈழத்துப் புனைகதை எழுத்தாளர்களிற்பலர் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கைப் பதிவு செய்துள்ளனர். குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் முதல் மூன்று நான்கு தசாப்பதங்களுள் வெளிவந்த நாவல்கள் சிறுகதைகளிலே யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்குச் சொற்கள் பரவலாகக் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்குச் சொற்களைப் பண்பாட்டு அடையாளமாக இனங்கண்டு பிரக்ஞை பூர்வமாகத் தமது

படைப்புக்களிலே பேராசிரியர் கணபதிப்பிள்ளை பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையிலே டானியல், தெணியான், செங்கை யாழியான் முதலானோருக்கும் முக்கியத்துவம் உண்டு.

யாழ்ப்பாணத்து மொழிவழக்கில் இடம் பெறும் பேச்சுவழக்குச் சொற்கள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், விடுகதைகள் முதலியவை மிகவும் முக்கியமானவை. யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் வாழ்வியற்பண்பு காரணமாக உருவான, அல்லது உருவாக்கப்பட்ட சொற்களை முழுமையாகத் தொகுக்கும் பணி இன்னும் குறிப்பிடத்தக்க அளவுக்கு நடைபெறவில்லை. கலாநிதி சுபதினிரமேஷ் தொகுத்துப் பதிப்பித்த பேச்சுவழக்குச் சொற்கள் என்னும் நூலுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. முதன்முயற்சி என்றவகையிலே இதனைப் பாராட்டலாம். எனினும் முழுமையானது அல்ல என்பதையும் மனங்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு மொழி வழக்குச் சொற்களையும் அவை சுட்டும் பொருளையும் பட்டியல் இடுவது நமது நோக்கமன்று. அவை தனியான ஒரு நுலுக்கு உரியவை. எனினும் வகைமாதிரிக்குச் சில சொற்களைச் சுட்டிக் காட்டலாம் என எண்ணுகிறேன். அவிச்சோர் (ஏமாற்றுக்காரன்) அசுமாத்து (சந்தடி) அலக்கமலக்க (அந்தரப்பட்டு) அக்கப்பாடு (கஷ்டம்) இறப்போர் (கஷ்டம்) எடுபாடு - எடுவை (படோடப வெளிப்பாடு) ஊர்த்தொழவாரம் (ஊர்வேலை, பயனற்றது) தரவளி (ஒரேதன்மைத்தான) முட்டுப்பட்டு (கஷ்டப்பட்டு) கந்தறுந்த (ஒன்றுமில்லாத) எம்டன் - எமில் (ஏமாற்றுக்காரர்) கெடிமண்ட (அதிகமாகப் பயப்பட) இத்தகைய சொற்களின் பயன்பாட்டை யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் உள்ள முதியவர்களிடம் இன்றும் காணலாம்.

இவ்வாறே பழமொழிகள், மரபுத் தொடர்கள், விடுகதைகள் முதலியனவும் யாழ்ப்பாணப் பண்பாட்டிலே காணப்படுகின்றன.

உ+ம்: "பனைமரத்திலே படவாள் பார்ப்பது" கள்ளுக்குப் புரியன்கதை, கள்ளைக்குடுத்து உள்ளதைக்கேள். இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கே உரியபலவற்றைச் சுட்டிக்காட்டலாம். விரிவஞ்சி விடுக்கிறேன்.

ஒரு பிரதேசத்துமொழி வழக்குச் சமூகமாற்றம் காரணமாக அருகிப்போவதும் புதுவதான சொற்கள் வந்து சேர்ந்து வழங்குவதும் இயல்பானதே.

பழமையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல, கால வகையினானே"

(நன்னூல்)

**சடங்குகள், நம்பிக்கைகள்:**

யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் வாழ்வியலில் இடம் பெறும் சடங்குகள், நம்பிக்கைகளைப் பட்டியல் இடுவது இவ்வுரையிலே சாத்திய மற்றது. சடங்குகளும் நம்பிக்கைகளும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடை யவை. நம்பிக்கைகளின் வழிவரும் சடங்குகளும், சடங்குகளின் வழிவரும் நம்பிக்கைகளும் எல்லாச் சமூகத்திற்கும் பெரும்பாலும் பொதுவானவை யெனலாம். சடங்குகளுக்குள் சமயமும் சமயத்துக்குள் சடங்குகளும் இரண்டறக் கலந்துள்ளமையையும் அவதானிக்கமுடியும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழங்கும் சடங்குகளிற் பெரும் பாலானவை இடத்திற்கு இடம் பல வேறுபாடுகளைக் கொண்டிருப் பதைக் காணமுடியும். யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், சாதிகளுக்குமிடையே சடங்குகள் நிகழ்த்துமுறையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பொதுவாகச் சடங்குகளை வாழ்க்கை வட்டச் சடங்குகள் (பிறப்பு முதல் இறப்புவரை) பொருளியல் சார் சடங்குகள் (விவசாயம், கைத்தொழில், கடற்தொழில் முதலானவை) வழிபாடு சார் சடங்குகள் எனப்பகுத்துப்பார்க்கலாம். வழிபாடுசார் சடங்குகளிலே ஆகமவழிபாடு, கிராமிய வழிபாடு என இருவகை இருப்பதையும் குறிப்பிடவேண்டும். கிராமிய வழிபாட்டுமரபு சில இடங்களில் இன்று ஆகம வழிப்பட்ட மரபுக்கு மாற்றப்பட்டதையும் காணமுடிகின்றது. கண்ணகி வழிபாடு இராஜராஜேஸ்வரி வழிபாடாக மாற்றம் பெற்றமையை யாழ்ப்பாணத்தில் பலவிடங்களிலும் காணலாம். சமய, சமூக கருத்தியல் நிலை மாற்றங்களையே இவை புலப் படுத்துகின்றன. இவ்விடத்திலே பேராசிரியர் என். சண்முகலிங்கன் குறிப்பிடும் கருத்து விதந்து குறிப்பிடத்தக்கது.

"சமய மரபுகள் / வழிபாட்டு மரபுகள் என்பன பல்வேறு நம்பிக்கைகள் அவற்றினைப் பேணுவதற்கான ஐதிகங்கள் - சடங்காசாரங்கள் - இவற்றினை நிலை பேறாக்கும் கருத்தியல்கள் எனும் இசைவுச் செயற்பாடுகளின் வழிதான் நிலை பெறுவன. இசைவு இல்லாதபோது நிலைமாறுவன"[32]

கிராமிய வழிபாட்டுச் சடங்குகளே எமது பண்பாட்டின் அடையாளமாக விளங்குகின்றன. மடை, உரு, சன்னதம், வேள்வி, பொங்கல், படையல், குழுத்தி (குளிர்த்தி) முதலானவை மிகவும் முக்கியமானவை.

யாழ்ப்பாணப்பிரதேச மக்களின் நம்பிக்கைகளாகப் பலவற்றைக் குறிப்பிடலாம். வகைமாதிரிக்கு ஒரு சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். கண்ணேறுபடுதல் (நாவுறுபார்த்தல்) சகுனம் பார்த்தல் - முழுவியளம் (முழிவிஷேடம்) சாபமிடுதல், பல்லிசொல்லுதல், காகம்கரைதல், நாய் ஊளையிடுதல், கனவுகாணுதல் முதலான பல நம்பிக்கைகள் உள்ளன. இவற்றுக்கான பரிகாரங்களும் உள்ளன. இந்த நம்பிக்கைகளின் பின்னணி யிலே சமூகவியல், உளவியல் முதலானவை இருப்பதை ஆய்வாளர்க்ள சுட்டிக் காட்டியுள்ளனர். இச் சடங்குகள் நம்பிக்கைகள் யாழ்ப்பாணத்தில் எழுந்த செந்நெறி இலக்கியங்களிலும் நாட்டார் இலக்கியங்களிலும் நிறையவே இடம் பெற்றுள்ளன. இச்சடங்குகள் நம்பிக்கைகள் பல இன்று மறைந்தும் மாறியும் உள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

**கலைமரபுகள், கல்விமரபுகள்**

யாழ்ப்பாணத்துக் கலைமரபுகளில் பொருள்சார் பண்பாட்டில் இடம்பெறும் அழகியலோடொட்டிய கலைமரபுகள் பற்றி ஏலவே குறிப்பிட்டோம். யாழ்ப்பாணத்துக் கைவினைசார் கலைகள் பெரும் பான்மையும் சாதியமைப்பை அடிப்படையாகக்கொண்டே வழங்கி வந்தன. தவில், நாதஸ்வரக்கலையும் சாதியமைப்பைத் தழுவியதாகவே இன்றும் வழங்கிவருகின்றது.

கரகம், காவடி, கூத்து, நடனம் முதலான கலை வடிவங்கள் சமயச் சார்புடையனவாகத் திகழ்ந்த அதேவேளை அவைக்காற்றுக் கலைக ளாகவும் விளங்கின. இவற்றுட்பல இன்று மறைந்துவிட்டன. கூத்துக்கலை கூட பொரும்பாலும் நேர்த்திக்கடனுக்காக ஆடுவதாகவே யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வழங்கி வந்தது. சமய கரண அடிப்படையிலே ஆடப்பட்ட

கூத்துக்கள் சமூக நீதிபோதிப்பனவாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

மிஷனரிமார் வருவதற்குமுன்னர் திண்ணைப்பள்ளி மரபும் குருகுலக் கல்விமரபுமே இப்பிரதேசத்தில் நிலவியது. குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரே கல்வி பெறக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தனர். இவை பற்றி எமது யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்வி என்ற நுலிலே விரிவாகக் குறிப்பிட்டள்ளோம்.

யாழ்ப்பாணத்துப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும் என்னும் இவ்வுரை எமது பண்பாட்டின் முக்கியமான சில கூறுகளைக் கோடிட்டுக்காட்டுகின்றது. பண்பாட்டின் ஒரு கூறாக விளங்கும் பொருள்சார் பண்பாடு பற்றி ஓரளவுக்கு விரிவாகக் குறிப்பிட்டுள்ளேன். இந்த உரை அமையவேண்டிய நேரத்தை மனங்கொண்டு பொருள்சாராப் பண்பாட்டினை மிகச் சுருக்கமாக அறிமுகப்படுத்தியுள்ளேன். இன்னும் விரிவாக நோக்கப்படவேண்டிய பல்வேறு விடயங்களை உரையிலே கொண்டுவர விரும்பியபோதும் நினைவுப் பேருரைக்குரிய வரையறை அவ்விருப்பத்திற்கு இடமளிக்கவில்லை. விரிவான ஒரு நுலுக்குரிய விடயப்பரப்பை நாற்பத்தைந்து நிமிடத்திற்குள் சுருக்கித் தந்திருக்கிறேன். சமூகவியல், மானிடவியல், தமிழியல், உளவியல், நாட்டார் வழக் காற்றியல் பின்னணிகளில் பின்னர் இது பெருநூலாக வெளிவரும் என்று நம்புகிறேன்.

இந்த நினைவுப் பேருரையை நிகழ்த்துமாறு என்னை அன்புரிமை யுடன் பணித்த துணைவேந்தர் பேராசிரியர், என்.சண்முகலிங்கன் அவர்களுக்கு என்றும் மறவா நன்றியுடையேன்.

பேராசிரியர் வித்தியானந்தனைப் பற்றி "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்று வாழும் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் என்னைக் காணும்போதெல்லாம் வித்தியானந்தன் நினைவுப் பேருரையை நிகழ்த்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுப்பார். அவருக்கு எனது அன்பார்ந்த நன்றிகள்.

இவ்வுரையைத் தயார் செய்யும் காலத்தில் எனக்கு உதவிய கலாநிதி கி. விசாகரூபன், பா.அகிலன், சீ.ஜெயதீஸ், ஈ.குமரன் க.அருந்தாகரன், ஆகியோருக்கும் துரிதகதியில் இதனை அச்சிட்டுத்தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் நன்றியுடையேன்.

## அடிக்குறிப்புக்கள்

1. பக்தவற்சல பாரதி பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம் - சிதம்பரம் - 2003, ப. 151
2. மேலது ப. 151
3. மேலது ப. 151
4. மேலது ப. 152
5. சிவத்தம்பி, கா. தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும், நியூ செஞ்சரி புக் கவுஸ், சென்னை - 1994.
6. பக்தவற்சல பாரதி, ப. 135
7. அகிலன், பா. யாழ்ப்பாணம் மொழியும் வாழ்வும் 2006 ப. 63
8. சி.இராசரத்தினம், வாழ்வுச் சுவடுகள், அகிலம் வெளியீடு, இரத்தினம் ஒழுங்கை கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் - 2006, பக். 14, 15
9. Dr. Green, S.J., Life and letters P.89
10. கணபதிப்பிள்ளை, க. காதலியாற்றுப்படை - 1952
11. வேலுப்பிள்ளை, கல்லடி, யாழ்ப்பாண வைபவ கௌமுதி - 1918, ப. 147
12. மேலது ப. 13
13. அகிலன், பா. பனுவல்
14. Dr. Green, S.J. P. *216*
15. அகிலன், பா. பனுவல் இதழ் III
16. Hentry Martein. Notes on Jaffna Asian Educational Service New Delhi Chennai - 2003 P. 354
17. ஜேசுதாசன் E.K. கனம் ரி.பி. ஹன்ற் போதகர் அவர்களின் சீவியச் சரித்திரச் சுருக்கம், இலங்காபிமானி - 1941, ப.15
18. ஜெபநேசன், எஸ். இலங்கையில் 19ஆம் நூற்றாண்டுத் தமிழர் சிந்தனை வளர்ச்சி - யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை - 1992, பக். 52
19. அழகம்மா திருமண அலங்கோலக் கும்பி

20. ஹரியட் வின்சிலோ, நெஞ்சின் அலைகள். பாகம் I, சமய, சமூக ஆய்வுக்கான கிறிஸ்தவ மையம், சுன்னாகம் பக். 181, 182

21. ஹரியட் வின்சிலோ. நெஞ்சின் அலைகள். பாகம் II, சமய, சமூக ஆய்வுக்கான கிறிஸ்தவ மையம், சுன்னாகம் ப. 152

22. கணபதிப்பிள்ளை, க. காதலியாற்றுப்படை

23. ஹரியட் வின்சிலோ, பாகம் II, ப. 152

24. அகிலன், பா. மேலது

25. ஹரியட் வின்சிலோ, பாகம் I, பக். 180, 181

26. பக்தவற்சல பாரதி, தமிழ் மானிடவியல், ப. 309

27. கணபதிப்பிள்ளை, க. காதலியாற்றுப்படை .

28. பாலபோதம், மிஷனரிமாரின் பாடப் புத்தகம்.

29. வேலுப்பிள்ளை, கல்லடி - யாழ்ப்பாண வைபவ கௌமுதி- 1918 ப. 149

30. சிவத்தம்பி, கா. யாழ்ப்பாணம் - சமூகம் பண்பாடு கருத்துநிலை, குமரன் புத்தக இல்லம் கொழும்பு - 2000, ப.112.

31. பக்தவற்சல பாரதி தமிழர் மானிடவியல்

32. சண்முகலிங்கன், நா. பக்தவற்சல பாரதி, இலங்கை இந்திய மானிடவியல். மெய்யப்பன் பதிப்பகம் - 2004, ப. 13.



பேராசிரியர் சு. வித்தியானந்தன் 1924 - 1989

1924 ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி சுப்பிரமணியம் முத்தம்மா தம்பதியினருக்கு இரண்டாவது புதல்வனாகப் பிறந்தார்.

ஆரம்பக்கல்வி : வீமன்காமம் தமிழ்ப்பாடசாலை

இடைநிலைக்கல்வி : யூனியன் கல்லூரி

உயர்கல்வி : யாழ் - பரியோவான் கல்லூரி, இந்துக் கல்லூரி

1941 ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு மாணவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1944 இல் தமிழ் சிறப்புப் பட்டதாரியாக விஷேட சித்தியுடன் வெளியேறினார்.

பேராசிரியர்கள் சுவாமி விபுலானந்தர் க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம் முதலியோரிடம் கல்வி கற்றார்.

1946 இல் பேராசிரியர் விபுலானந்தர், பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோரின் வழிகாட்டலில் முதுகலைமாணிப் (M.A) பட்டத்தினைப் பெற்றார். இதே ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

1948 ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகம் சென்று கலாநிதிப்பட்டம் பெற்று 1950 ஆம் ஆண்டு நாடுதிரும்பினார்.

1967 இல் இணைப்பேராசிரியர் ஆனார்.

1970 இல் இலங்கை பேராதனைப்பல்கலைக்கழகத்தின் நான்காவது தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

1977 இல் இலங்கைப்பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத் தலைவராக நியமனம் பெற்றார்.

1979 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தரானார்.

1989 இல் அமரரானார்.

Harikanan, Jaffna.